தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்



கருநாடகச் சிறப்பிதழ்

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தாயகமாகக் கொண்டுள்ள திராவிடத்தின் எழில்சேர் பகுதியாக விளங்கும் கருனடக மாநிலத்தின் சுவையான வரலாறுஎண்ணியெண்ணி மகிழத் தக்கதாகும். திராவிடத்தின் புகழுக்கு மிகச்சிறந்த செல்வங்களை வகை வகையான வளத்துடன் வாரிக்குவித்திருக்கும் வண்ணத்தோற்றம் வார்த்தைகளுக்குள் அடைபடக் கூடியது அல்ல! கன்னடமொழித் தாயகத்தின் கவர்ச்சியும், கருத்துக்கிளர்ச்சியும் கவனத்தை விட்டு என்றும் நீங்க முடியாதவைகளாகும். கருனடகத்தின் எல்லாப் பகுதிகளையும் கண்டு திரும்புவோர் திராவிடப் பண்புகள் எந்தப் பகுதியையும் ஒதுக்கிவிடாமல் சூழ்ந்து நிற்பதை உணரமுடியும். கன்னடத் திருநாட்டில் கழகத்தின் காலடிச் சுவடுகள் மிகப் பெருமையுடன் ஆழமாகப் பதிந்து வருகின்றன. கன்னடத்தவர் கருத்தெல்லாம் கழகத்தின் மீதிருப்பதைக் காண முடியும். கர்னடகத்தின் மிகப்பெரும் பண்பாட்டுத் தகுதிபெற்ற தலைநகரம் மைசூர்! இதன்பெயர் கொண்டே இந்த மாநிலமும் சிறப்புப் பெயர் பெற்றது வெள்ளையர் ஆட்சியின் போது! இதனை ஆளுகின்ற வாய்ப்புப் பெற்ற மன்னர்கள் பலரும் தங்களின்மகிமைகளை மாபெரும் விழாக்கள் நடத்துகின்ற மகிழ்ச்சியிலே தான் மாநிலத்தவர்க்குக் காட்டியுள்ளனர். வரலரற்றுப் புகழ்பெற்ற 'தசராக் கொண்டாட்டம்' கன்னட மக்களுக்கு மட்டுமல்ல; காணவருவோர் எல்லார் இதயங்களுக்கும் இன்பத் திருவிழாவாக இன்றும் இருந்துவருகின்றன. மைசூர் மன்னர்களின் பகட்டும், பரிவாரங்களின் அணிவகுப்பும். அவர்களின் அலங்கார ஊர்வலங்களும் மின் விளக்கொளியிலே இணையற்ற சிறப்பைப் பெறுகின்றன. கலைச்சிறப்பு மிக்கது,அந்த அழகுத் திருநகர். பிருந்தாவனப் பூங்காவின் எழில் உருவம் கலந்துபோன கனவுகளின் காவியத் தோட்டமாகும்! நீர்த்தேக்கத்தின் ஒயிலாட்டம் நினைவிலே நிற்கும் கலை ஓவியமாகும்! மைசூர் மன்னர்கள் மாண்புகள் பல கொண்டு மக்களின் இதயத்திலே இடம் தேடிக்கொண்டவர்கள் என்பதைத்தான் இன்றளவும் அந்த மக்கள் தங்களது மன்னருக்கு விரும்பித்தந்து வரும் மரியாதை முறைகள் வெளிப்படுத்துகின்றன. சேலம் மாவட்டத்தின் எல்லையிலே தொடங்கும் மைசூர்மாநிலத்தின் நீண்டபெரும் பரப்பளவு வடபுலத்தின் மராட்டிய மண்டலத்தைத் தொட்டுப் பார்க்கும் அளவில் பரந்து நிற்கின்றது. தென்னகத்தின் இணைப்பைப் பிரித்துவைப்பதற்கே பழக்கப்பட்டிருக்கும் வடவர் ஆட்சியும், அந்த ஆட்சியின் அலங்கோல அமைப்பு முறைகளும் கன்னடத்தின் பல பகுதிகளை வேற்று மாநிலங்களுடன் இணைத்துப் பிணைத்தும் வேடிக்கை பார்க்கிறது. கன்னடம் காங்கிரசுக்கட்சியின் ஆட்சிப் பிடியிலேயே இருக்கின்ற காரணத்தால் தனக்குள்ள வரலாற்றுப் பெருமையை இன்னும் அதனுலே பெற்றுக்கொள்ள முடியவில்லை.'இந்திய யூனியன்' என்ற பொல்லாத அமைப்புத்தான் கன்னட மாநிலத்தின் தனித்தியங்கும் உரிமையைப் பறித்தது. இதற்காக இன்றுங் கூட பாராட்டுதலைப் பெருகிருர் வல்லபாய் பட்டேல். கன்னட மாநிலத்தின் அரசியல் அதிகச் சிக்கல் நிறைந்ததல்ல. துணைக்கண்டம் முழுமையும் அமளிகள் இருந்தாலும் அங்கே அமைதியைக் காணமுடியும். ஆனுல் துணைக்கண்டமெங்கும் அமைதி நிலவும் போது சிலபல நேரங்களில் அங்கே அமளிகள் நடைபெறுவதுமுண்டு. கன்னடத்தின் வணிகச் சிறப்புத்தான் அண்டை மாநிலத்தின் நெருங்கிய தொடர்புகளைப் பெருக்கிவைத்துள்ளது. சொந்தமாநிலத்தின் பெருமைகளைக் காத்துப்புகழ்பெறுவதில் கன்னடத்தவர் இணையற்றவர்கள். சிற்சில பகுதிகள் கன்னடத்துடன் சேர்க்கப்படுவதையும் கண்டித்தவர்கள் அதிகம். அந்த மக்களுக்குப் பல வகையிலும் பொறுமையுணர்ச்சி அதிகம்; பொறுப்புக்களைத் தயங்காமல் தாங்கிக் கொள்ளும் தன்மையும் அதிகம்! ஆட்சிமுறைகள் மாறினுலும் அமைச்சர்கள் மாறினுலும் அங்குள்ள மக்கள் அவைகளைப் பற்றி அதிகமான பரபரப்பு அடைவதில்லை.



★

தோழர் கி. சோழன், கருநாடகம் தமிழுக்குத் தந்த நல்ல எழுத்தாளர்; எழுச்சிப் பேச்சாளர். அரசியல் மேடைகளிலும் கலைஅரங்கங்களிலும் இயக்க ஏடுகளிலும் முழங்கிவரும் இவர் தொண்டர்க்குத் தொண்டர். பகைவர்க்கு நெடுங்கணை. கருநாடக முதல் மாநாட்டின் விளம்பரச் செயலாளர்.

இவர் எழுதிய நாடகம் 9-ம் பக்கத்தில் உள்ளது.

★

தங்களின் வாழ்க்கையே குறிக்கோளாக இருப்பர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்ணத்திற்கேற்ற எழுச்சி முரசுகளாகப் பலப்பல நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றுள்ளன. புகழ்பெற்ற நீதிபதி மேடப்பாவை நஞ்சூட்டிக் கொல்லச் சில சதிகாரர்கள் செய்த முயற்சிகள் நடக்காமல் தடுக்கப்பட்டன. சதியிலே பங்கேற்றவர்கள் வழக்கறிஞர்களாகவும் இருந்தார்கள்! அவர்கள் மீதிருந்த வழக்கு விசாரணையை மாநிலத்தின் பொறுப்பிலே விடாமல் மத்திய சர்க்காரின் விருப்பம்போல் மாநிலத்திற்கு வெளியிலே நீதிமன்றத்தில்தான் விசாரிக்க வேண்டும் என்ற அநீதி நிறைந்த முடிவைத் தந்தனர். தில்லியின் ஆதிக்க வெறிக்கு முதல் முழக்கமிட்ட கன்னடத்தின் அந்தநேரத்துச் செய்திகள் திராவிடத் தனியரசு பெறவேண்டும் என்ற அரசியல் உரிமைக்கு அடிப்படைகளாக இருந்தன. வடவர் ஆதிக்கம் கன்னடத்தின் மேல் படருவதைக் கண்டித்த காங்கிரசாரே அங்கே பலர். கட்சி மாச்சரியம் கலந்துவிட்டுக் கன்னடத்தின் உயர்வையே உரிமையாக மதித்தனர்.

அந்த மாநிலத்தின் இயக்க வளர்ச்சி இன்று நேற்றல்ல; கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாகவே சிறப்புக் கொண்டதாகும். கோலார் தங்கவயல் பகுதிகளும், தலைநகர்ப்பகுதியாக இலங்கும் பெங்களூரும் முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய வளர்ச்சிக்கு வரவேற்பளித்து நாட்கள் பலவாகி விட்டன. பெங்களூர் தலைநகரம் காணத்தகுந்த கலைப்பெருமைகள் கொண்ட இடமாகும். இந்தியத் துணைக்கண்டத்தின் குறிப்பிட்ட சிறப்புகளுக்குரிய நகரங்களில் பெங்களூரும் ஒன்று. சேலம் மாவட்டத்திலேயிருப்பவர்களுக்கெல்லாம் பெங்களூர் ஓர் உன்னதமும் உல்லாசமும் நிறைந்த உறைவிடமாகும்! சேலத்திலேயிருந்து 125 மைல் தொலைவிலே பெங்களூர்; பெங்களூரிலிருந்து மைசூர் 80 மைலில். ஆட்சிப்பொறுப்பின் அலுவலகங்கள் எல்லாம் பெங்களூரிலேயே அமைந்துள்ளன. ஒருமுறை நகரத்தைச்சுற்றிப் பார்த்தால் பல சுவையான செய்திகளைப் பெற்றுக் கொள்ளலாம். பெங்களூர் நகரத்தின் இதயப் பகுதியாக இருப்பது 'மெசஸ்டிக் சர்க்கிள்' என்பதாகும். கவர்ச்சிக் கோலம் நிறைந்த ஒரு திரைப்பட நிலையத்தின் பெயரே இந்தப் பகுதிக்கும் அமைந்துவிட்டது. நகரத்தின் எல்லாப்பகுதிக்கும் அழைத்துச் செல்லும் வாகன அணிவகுப்பு இங்கேதான் நடைபெறும். நீண்ட ஒரு பெரு வீதியின் எதிர்புறத்து இரு பகுதிகளிலும் வரிசையாகத் திரைப்பட நிலையங்களாகவே இருக்கின்றன. ஸ்டேட்ஸ், சாகர், பிரபாத், கெம்பேகவுடா, மெசஸ்டிக் என்று இடம் பெற்றுள்ளன. நகரத்தில் ஏறத்தாழ 45 திரைப்பட நிலையங்கள் இருக்கின்றன. எந்த நிலையத்திலும் இடம் பிடிப்பது எளிதல்ல! தமிழ்ப்படங்கள் ஒரே சமயத்தில் மூன்று இடங்களில் வெளியிடப்பட்டால் கூட பெங்களூர் மக்களைப்போதுமான அளவுக்கு நிறைவு செய்ய முடிவதில்லை. இந்திப் படங்கள் முதலிடம் பெறுகின்றன- கன்னடப் படங்களும் பவனி வருகின்றன. 'குப்பி வீரண்ணு' போன்ருரின் நாடகப் பணியும் உண்டு! மக்கள் வெள்ளத்தின் நெருக்கடி நிறைந்த அக்கிப்பேட்டையும், சிக்பேட்டையும், காட்டன்பேட்டையும் வணிக நிலையங்களாகும்! பெங்களூர் நகரத்தின் புகைவண்டி நிலையத்தின் எதிர்ப்புறம் பெரியதோர் திடல் பொருட்காட்சிகள் நடைபெறுவதற்காக பண்படுத்தப்பட்டுள்ளது! இவைகளைத் தாண்டிப் போகும் போதுதான் என்றும் மறக்க முடியாமல் மனதைக் களிப்பிக்கும் 'மல்லேசுவரம்' பகுதி உள்ளது. இன்னும் தொழிலாளர் வதியும் திருராமபுரமும் உண்டு! 1953-ஆம் ஆண்டு, பொங்கல் விழாவினை-முதன் முறையாக என்று எண்ணுகிறேன்-மிகச் சிறப்பாக திராவிடர் கழகத் தோழர்களும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் இணைந்து நின்று சிறப்பித்தார்கள்! புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேராசிரியர் அன்பழகன், கடலூர் வீரமணி ஆகியோர் வந்திருந்து விழா எழில் பெறச் செய்தனர்! திராவிட இயக்கத்தின் செய்திகள் என்ருல் அங்குள்ள கன்னட மக்களும் வாழும் வகைதேடிச் சென்றுள்ள தமிழர்களும், கேரளத்தவரும் விரும்பிக் கேட்பர். கழகத்தின் கருத்துக்களைக் கேட்க மறுப்பவர்கள் அதிகமாக இருந்தாலும், கேட்டுத் தெரிந்தவர்கள் மறந்து விட்டதில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறப்பான பல நிகழ்ச்சிகள் 'சிக்கலால்பாக்' என்ற இடத்தில்தான் நடைபெற்றுள்ளன. 12-3-53-ல் தமிழகத்தில் புயல் வீசி தஞ்சை திருச்சி மாவட்டங்கள் மக்களின் கண்ணீர் வெள்ளத்திலே மிதந்தபோது கன்னட மக்களின் காணிக்கைத் தொகை பெற்றுக்கொள்ளக் கருணநிதி வந்திருந்தார்! கலைஞர் அங்கு வீரப் பண்ணிசைத்தார். கன்னடத்தின் தலைநகர், கலைஞரின் சொல் கேட்டுத் துடித்தது-மகிழ்ந்தது-கழகத்தின் பின்னே கொடி உயர்த்தியது! அதுபோலவே 14-3-54-ல் அறிஞர் அண்ணு, கோவிந்தசாமி, அ. பொன்னம்பலனுர் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பொதுக் கூட்டமும் சிறந்தது. தூத்துக்குடி சதிவழக்கு நிதிகேட்டு வந்திருந்த அண்ணு அவர்கள் மற்ற எவரும் வரவேற்கப்படாத வகையிலே வரவேற்கப்பட்டார்! அன்று கண்ணைச் சுழற்றிய பக்கமெல்லாம் மக்கள் கூட்டம்; தாய்மார்களின் முகம்! "தமிழகத்தில் மட்டும் ஆயிரம் கிளைக் கழகங்களையும், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பேச வந்திருக்கிறேன். பெண் வீட்டுக்காரன் பெண்ணின் அறிவையும் அழகையும் அருங்குணங்களையும் மாப்பிள்ளை வீட்டாரிடத்திலே சொல்லுவதுபோல கர்னடகத்திலேயிருக்கிற வாலிபத் தோழர்களுக்குச் சொல்ல வந்திருக்கிறேன். திராவிடத்தின் எழுச்சியை - கழகம் பண்படுத்தியிருக்கும் தமிழகத்தைக் காண வேண்டும்

— 11-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 20-2-'60 ‖ இதழ் 36

கருநாடகம் காதுமட்டும் கொடுக்கவில்லை!

கருநாடகம்! சொல்ல இனிக்கும் நல்ல பெயர்! புகழ் ஒளிரும் திராவிடத்தில் எழில் உலவும் தொழிற் பூங்கா! கயல்விழிப் பெண்டிரும் புயல்நிகர் மறவரும் பண்பாடிய திருமண்! அன்னைத் தமிழ்மொழி முன்னை நாளில் பெற்றுவிட்ட கன்னடம் களிநடம் புரியும் கோல வானம்! அறிவுத் தாமரைகள் பல மலர்ந்த கண்ணாடி நீர்த் தடாகம்!

கருத்தொளி வெள்ளம் பாயும் கிழக்கு வானமாகத் திகழும் கருநாடகம், நமக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறது. வலிய குரலெடுத்து இனிய பள்ளுப் பாடினோம்; "திராவிட நாடு திராவிடருக்கே!" என்றோதினோம்!

"எப்படி உங்களால் திராவிடம் பெறமுடியும்? ஏற்பரா கன்னடத்தாரும், களி தெலுங்கு நாட்டாரும், கவின் மலைஞாலத்தாரும்? ஒன்று சேர்ந்த குரல் எழும்பாதபோது நீங்கள் வென்று மகிழ்வது எப்படி?" என்றும் கேட்டனர், தமிழக அரசியலில் தப்பி நுழைந்தவர்கள். அவர்களுக்கெல்லாம் "காலம் வரும்; அப்போது கழகம் கூறும் கருத்தை எங்கும் கேட்பீர்! புதிய திராவிடத்தைக் காண்பீர்!" என்றோம். நம்ப மறுத்தவர்கள் இன்று வெம்பிச் சாகிறார்கள். கணக்கில் தப்பியவர்கள் இன்று தம்முகத்தில் கரி பூசிக்கொள்கிறார்கள். கழகத்தின் முழக்கம் காற்றோடு போகாமல், கருநாடக மக்கள் உள்ளங்களிலெல்லாம் ஒலிக்கிறது. நாள்தோறும் நம் கொள்கைகளைக் கேட்கும் அம்மக்கள், நம் வழியில் கூடுகின்றனர்.

"நாமெல்லாரும் ஓரினம்!" என்றோம்.

"ஆம்! ஆம்! நாமெல்லாரும் ஓரினம்! நாமெல்லாரும் திராவிட இனம்!" என்கின்றனர் அவர்கள்.

இந்த உறவு-குருதிப் பிணைப்பு இன்று நேற்று ஏற்பட்டதில்லை. பல்லாண்டுகளாய், கற்பனைக்கெட்டாத நெடு பல நூற்றாண்டுகளாய் வளர்ந்து வந்துள்ளது.

கன்னடத்தின் இனிமையை, செயங்கொண்டான் புகழ்ந்து பாடினான். ஆரியக்கலப்பு மிகுவதற்கு முன் வழங்கிய கருநாடக மொழியில் நூற்றுக்குநூறு தமிழ்ச் சொற்களே நிறைந்துள்ளன. இந்த உண்மையை விளக்கும் மற்றொரு சான்றை வருமிதழில் "ஆசிரியத் தோழர்க்கு"ப் பகுதியில் காணலாம். மற்றும் கன்னடத் தோழர்களின் நடையுடை பாவனைகளும் அணி மணி ஒப்பனைகளும் அவற்றை விளக்கும். இசை வழியிலும் பிற கலைமுறைகளிலும் தமிழரிடையும் கன்னடியரிடையும் நிலவும் ஒத்த போக்கையும் யாவருமறிவர். இந்த உண்மைகளையெல்லாம், வரலாற்று மேற்கோள்களுடனும் வாழ்க்கை ஒருமைப்பாடுகளுடனும் எடுத்து வைத்தோம். அவர்கள் கேட்கத் தொடங்கினர். அதன் பலன் தான் இன்று கருநாடகத்தில் எங்கணும் நமது கிளைகள். அங்கே நாம் பையப் பைய வளர்ந்தாலும், ஆழ்ந்து வேரூன்றி யிருக்கிறோம்.

கருநாடகத்தில் வாழும் தமிழர்கள் மட்டுமே நம் கொள்கைகளை ஏற்றனர் என்ற புனைந்துரையையும் சிலர் கொட்டினர். கதிரவனின் ஒளியைத் தம் சிறகுகளால் மறைக்க முனைந்த காக்கைக் கூட்டங்களின் உறவினர்கள் அவர்கள். இன்று கருநாடக மாநிலச் செயல் மறவராய்த் திகழும் தோழர் பதி முழுக்க முழுக்கக் கன்னடியர். இலிங்காயத் வகுப்பில் பிறந்த அவர், தம் சாதி வழக்கப்படி நெஞ்சில் இலிங்கம் அணிய மறுத்துத் தன் மானத்தை நிலை நாட்டினார். உல்லாச வாழ்வை ஒதுக்கித் தள்ளிவிட்டு இன எழுச்சிக்குப் பாடுபடும் எண்ணற்றோர் அவர் போலக் கன்னடியராயுள்ளதை இவ்விதழின் பலபக்கங்களிலும் காணலாம்.

அவர்களெல்லாம் "நம் இனம் ஒன்றே!" என்ற குரலெடுத்து ஆயிரமாயிரம் உண்மைகளைப் போதித்து, வினாக்களை எழுப்புகின்றனர். ஐதர் அலி வசதிகள் அதிகமற்ற நாட்களில் ஆண்டான். இன்றைய நேருவுக்கு இருப்பதை விடப் பன்னூறு பகைகள் அவனுக்கிருந்தன. அவன் ஆட்சியில் நுழைந்த போது, கப்பம் பல கட்டிக்கட்டி மைசூர்க் கருவூலம் இளைத்துக் கிடந்தது. ஆனாலும் அவன் தொண்டுள்ளத்தாலும் மற நெஞ்சத்தாலும், புகழையும் பொருளையும் பெருக்கிக் காட்டினான். கல்வியறிவற்ற அவனின் இறுதி நாட்களில் அளவிறந்த செல்வங்கள் மைசூர்க் கருவூலத்தில் கொழித்தன. அத்தோடு நாடெங்கும் அமைதி தவழ்ந்தது. இப்படி வரலாற்றாசிரியர்கள் ஐதரின் ஆட்சியைப் புகழ்ந்தோதிச் சென்றிருக்கின்றனர். ஆனால் நேரு படித்துப் பட்டம் பெற்றவர்; வசதிகள் மிக்க நாட்களில் ஆள்பவர்; மைசூரை விடப் பலமடங்கு பரந்த நிலத்தை ஆள்பவர். அப்பண்டிதர் கையில் பரங்கிக்காரன் ஆட்சியைத் தந்து சென்ற நாட்களில், இந்திய அரசின் கருவூலத்தில் அளவற்ற பணத்தையும் விட்டுச் சென்றான். பண்டிதர் அந்தப் பணத்தையும் செலவழித்தார். அத்தோடு நாட்டை அடகு வைத்து வெளி நாடுகளிடம் கடனும் வாங்கிவிட்டார். எனினும் இந்தியத் துணைக் கண்டத்தில் சிந்திய கண்ணீரும், சிதைந்த நெஞ்சுமாய் அலைவோர்தான் பல்கியுள்ளனர்; களிப்பைக் காணமுடியவில்லை. தம் பழம் வரலாற்றைப் படித்துணர்ந்த கன்னடியர் "இந்த நிலை ஏன்? ஐதரின் காலத்தில் நடந்தது பண்டிதரின் காலத்தில் நடக்கமுடியாமற் போனது ஏன்? எதனால்? எவரால்?" என்ற பல வினாக்களையும் எழுப்புகின்றனர். அந்தத் தூய பணிகளே அண்ணாவின் உள்ளத்திலும் தம்பிகள் நெஞ்சிலும் புதிய நம்பிக்கையை-வலிய அமைப்பை எழுப்புகின்றன. இவ்வளவையும் பார்த்தபின்னர் "கருநாடகம் காது கொடுக்கிறதா?" என்று கத்துவோர்க்கு. இதைச் சொல்வோம்: "கருநாடகம் காதைமட்டும் கொடுக்கவில்லை; கையையும் கொடுக்கிறது; போராட்டங்களுக்கு நிதியையும் கொடுக்கிறது; கலங்காத நெஞ்சையும் கொடுக்கிறது. அத்தோடு உம் வாயை அடைக்க ஒரு மூட்டைப் பஞ்சையும் கொடுக்கிறது! பஞ்சைகளே! ஓடுங்கள்! ஒதுங்குங்கள்!"

அந்த நல்ல காட்சியைப் படைத்தவர்களைப் பாராட்டுதற்கே இந்தச் சிறப்பிதழை வெளியிடுகிறது, "தென்றல்". இதனை வெளியிடும் இந்த நேரத்தில் தமிழக மக்களுடன் சேர்ந்து நாமும் அந்தத் தோழர்களை வாழ்த்துகிறோம்:

"திராவிடம் ஓங்கவும் தீமைகள் நீங்கவும் திரண்டெழுந்திட்ட கருநாடகத் தோரே! எழுகதிரின் பொன்னொளியை நம் இதயம் இசைக்கும் புதுப்பாட்டில் காட்டுவோரே! பிளவு தூர்ந்தது; உறவு வளர்ந்தது; மறைத்திருந்த திரைகள் கிழிந்துவிட்டன; பிரிந்திருந்த கைகள் சேர்ந்துவிட்டன. எந்தச் சூழ்ச்சியும் இனி நம்மைப் பிரித்தெடுக்கமுடியாது! வடுகும் தமிழும், தெலுங்கும் சேரமும் குழைத்தெடுத்து, வார்த்தெடுப்போம் திராவிடச் சொல்லோவியத்தை! அழகும் தெளிவும், அறிவும் பொருளும் சேர்த்தெடுத்துக் காத்திருப்போம் திராவிட எழில் நாட்டை! சுரண்டும் தில்லியைப் பந்தாடி வாழ்வின் விடிவெள்ளியைக் காண்போம்! ஆண்டுகள் சில சென்றாலும் அது நடந்தேதீரும்! நம் சந்ததியாகிலும் அதை அடைந்தேதீரும்! உணர்வு இதுவாக, உறவு வலிதாகப் புறப்படுவோம்; புறப்படுவோம்; பொல்லாப் பகை வீழ்த்தப் புறப்படுவோம்! ★

முதல் பக்கத்தில் உள்ள படங்கள்
மைசூர், பெங்களூர்க் காட்சிகள்.

என் தாய்

(5)

ஈரோட்டிற் கண்மையிலே பேரோ டென்னும்
எழிற்சிற்றூர், உழவர்குடி, நாளும் இன்பச்
சீரோஇல் லாத்தனது குடும்பந் தன்னைச்
சோராது, கலங்காது விறகு விற்றும்,
ஏரோட மழைக்காக ஏங்கும் காட்டை
எட்டிஎட்டிப் பார்த்தென்தாய் ஏக்க முற்றும்
போராடிப் போராடி வறுமைப் போரைப்
போயொழிக்க முயன்றிட்டாள்; தோற்றே விட்டாள்.

"மக்களுக்கே என்வாயை வயிற்றை எல்லாம்
வளர்காத லால்கட்டி வளர்த்தேன்" என்ற
கொக்கினுடல் நிறங்காட்டும் நரையைக் கொண்ட
கொங்குதமி ழெந்தாயின் மொழியைக் கேட்டு
மிக்கவுயர் தாய்க்குலத்தின் பெருமை கண்டேன்!
மேன்மைப்பேர் அன்புள்ளம் கண்டேன்! கண்டேன்!
மக்களாம் எங்கட்கே வாழ்வை யெல்லாம்
வயல்வாய்க்கால் நீரைப்போல் பாயச் செய்தாள்!

பள்ளியிலே பயன்கூட்டும் தேர்விற் காக
பணம்கட்ட எங்கெங்கோ கேட்டுப் பார்த்தும்
இல்லையிலை எனப்பதில்தான் கேட்டோம்; எந்தாய்
"இருக்குதடா வழிஒன்று, என்பொற் றாலி
நல்லவிதம் உனக்கன்றி எனக்கெ தற்கு?
நல்லபடி படித்துநீ வாழ்வில் துன்ப
நள்ளிரவு போக்கிமகிழ்(க)!" என்று சொன்ன
நற்றாயே என்னன்னை! எனது தெய்வம்!!

—ஓடை. இரா. வடிவேலன்

கோலாரிலே பசும்பொன், பத்திராவதியிலே கரும்பொன், காகித உற்பத்தித் தொழிற்சாலைகள், பெங்களூரிலே பருத்தி பட்டு நெசவாலைகள் நிரம்பியுள்ளதோடு, கனிவளமும் வனவளமும் பெற்றுத் தனிப்பெருமை கொண்ட கருநாடகம் தென்னகத்தின் ஓர் அங்கம். கன்னட மொழிபேசும் திராவிட இனமக்கள் ஆண்ட இனத்தின் முழுச்சிறப்பையும் "உடையவர்" களாவர்.

நாடு கேட்கும் நாம்; நம்மோடு ஒத்த பண்பியல்களைப் பெற்றுள்ள நம் கன்னட மக்களோடு கூடிக் குலவி, கருத்துக்களை சிதைத்து விடாமல் இயற்கையாக இணைந்துவாழ்வதை யாவரும் அறிவர்.

சமுதாயத்திலே, பொருளாதாரத்திலே உயர்ந்தவர்களாக; ஆவதற்கும்; இன்று நாம் தாழ்ந்துள்ள நிலை மாற்றுவதற்கு நாம் நடாத்தும் பேரியக்கத்தில் நம்மோடு, தோளோடு தோள் நின்று கருநாடகத் தோழர்கள் பணி புரிவதை மனமாச்சரியம் கொண்டவர்களும்— மமதை கொண்டவர்களும் அறியும் முகத்தான் இச்சிறு கட்டுரை பயன் படட்டும் என்கின்ற பேரார்வத்தால் எழுதுகிறோம்.

மன்னர்களின் ஆட்சியினைக் கொண்டிருந்த கருநாடகம், இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைந்தவுடன், மன்னராட்சியை மாற்றி மக்களாட்சியை ஏற்றுக்கொண்டது. விடுதலைப் போர்ப் பரணியிலே, கருநாடகத்தில் தமிழர் பெயர் உரிய, உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது என்றால், கன்னடியர்களும் தமிழர்களும் ஒன்றுபட்டு ஒரே நோக்கத்திற்காகப் போராட்டங்களை நடத்தினர் என்பது மட்டுமல்ல— இனத்தின் கூட்டுச் சக்தியுமாகும். கன்னடியர்கள் மொழி, கலை, பண்பு, இவையனைத்திலும் தமிழர்களிடமிருந்து மாறுபட்டவர்களல்லர் என்பதை நேரில் வந்து கண்டு போகின்றவர்களால் வெகுவாக உணரமுடியாது—வாழ்கின்ற பிற மொழியாளர்களைக் கேட்டால்தான் விளங்கும்.

கன்னடியர்களின் சமுதாயச் சீர்திருத்தை நாம் கேட்கும், படிக்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும் போதெல்லாம் கன்னடப் பேரறிஞர் "பம்பா"வின் பெயர் நினைவிற்கு வரும். நாம் இன்று கூறுவதைப் பல்லாண்டுகளுக்கு முன்னர் அவரும் கூறியுள்ளார்—கன்னட மொழியில்.

கன்னட மொழி— வட சொற்களின் துணையோடு இன்றுவழக்கிலே உள்ளது என்றால் அவர்களுடைய மொழியாம்- தமிழின் கிளை மொழியையும் வடவர் சிதைத்துச் சீர்குலைத்துள்ளனர் என்பதைப் பெரும் புலவர்கள் இன்று எடுத்தியம்பி வருகிறார்கள்.

வடவர்களுக்கு ஒவ்வொரு இன மக்களையும் வீழ்த்த வேண்டுமென்ற எண்ணம் எழும்போதெல்லாம், அவர்கள் கவனம் இதுவரையிலும் மொழியின் மேல்தான் பாய்ந்துள்ளது. அதோடு கருநாடகம் அவர்கள் எல்லையோடு ஒட்டியிருப்பதால் வடவர்கள் முயற்சி பெருமளவில் வெற்றியடைந்திருக்க வேண்டும்.

இன்று கருநாடக மக்கள், தங்களை வடவர்களாட்சி தாழ்ந்த நிலைக்குக் கொணர்ந்துள்ளது என்கின்ற பேருண்மையை உணரத் தலைப்பட்டதும் அவர்கள் ஆர்வமும் "நாடு பிரிய வேண்டும் என்கின்ற உண்மைக் குரலுக்கு" உரமூட்டுகிறதாக மாறியுள்ளது. எடுத்துக் காட்டுகள் ஏராளம் நம்மாலே காட்டமுடியும்.

திராவிடர் இயக்கமும் சுயமரியாதை இயக்கமும் கன்னட நாட்டிலே எவ்வத் துறைகளில் பணியாற்றுகிறது என்பதை விளக்குவோம்.

கன்னடியர்கள், சுயமரியாதையையும் சமுதாய முன்னேற்றத்தையும் என்றென்றும் விரும்புகிறவர்கள் என்பதை "ஒரு விடி வெள்ளியின்" செயலாற்றும் முறை கூறினால் நமக்கு வியப்புமிகும். "ஈரோட்டுப் பாதை" என்கின்ற சொற்களைக் கேட்கும் போது பெரியார் அவர்கள் நம் உடலில் உள்ள உறுப்புக்களிலெல்லாம்-உணர்வுகளிலெல்லாம் நிறைந்து நிற்பார்; அவர் கன்னடியர்! தமிழ்நாட்டிற்குக் குடிபெயர்ந்தவர்களின் வழி வந்தவர். அவர் ஆற்றும் பணிகளின் பெருமையெல்லாம் இன்று கருநாடகம் பங்குபோட்டுக்கொள்கின்ற உரிமை கொண்டது.

சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருமளவு உழைத்து, மக்கள் தங்கள் மனத்திலே கொண்டிருந்த மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்து, அவர்களை முழு மனிதர்களாக மாற்ற ஓயாது உழைத்த நல்லவர்களின் பட்டியல் கருநாடகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்கள் உள்ளங்களிலேயும் பதிந்து நிற்கின்ற காலம் இது. ஆனால் அன்று...

கோலார் தங்க வயல், பெங்களூர் ஆகிய ஈரிடங்களும் செயல்பட்ட விதமும், அதனால் தலைப்பட்ட வேதனைமிகு காட்சிகளும், நம் இயக்க வளர்ச்சிக்குப் பேருதவியாக நின்றுள்ளன என்றால் மிகையாகாது. சுயமரியாதை இயக்கமும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், முறைப்படி வளர்ந்து. காலப்போக்கில் எது வேண்டும் என மக்கள் விரும்பினரோ அது நின்று பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

இன்று தங்கம் விளையும் தரணியாம் கோலார் தங்க வயலின் பல்வேறு பகுதிகளிலுமாக 11 கிளைக் கழகங்கள் ஓயாமல் ஒழியாமல் கழகத்தின் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருகின்றன. இந்த வளர்ச்சிக்கு, அப்பகுதியிலுள்ள நமது அருமைத் தோழர்கள் தியாகங்கள் பல புரிந்துள்ளனர்.

தமிழகத்திலே 1955-ம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கம் தீவிரமாகப் போராட்டம் நடத்திய காலத்தில் பெங்களூரிலும் தமிழர்கள் பெருவாரியாக வாழ்கின்ற பகுதிகளிலிருந்து பலர் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அதேபோல் திராவிடர் கழகம் துவக்கப்பட்ட காலத்திலும் சீவனஅள்ளி, காடுகொண்டனஅள்ளி, கண்டோன்மென்ட், அக்கிப்பேட்டை ஆகிய பகுதிகளில் திராவிடர் கழக கிளைகள் துவக்கப்பட்டுச் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளை பல பயங்கமான எதிர்ப்புகளுக்கிடையே தோழர்கள் செய்து வந்தனர்.

1949-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நாம் தி. மு. கழகம் கண்ட நேரத்தில் தேவர சீவனஅள்ளி (பெரியார் நகர்) காடுகொண்டன அள்ளி ஆகிய பகுதிகளில் இயங்கி வந்த திராவிடர் கழகத்தை தி. மு. க. வாக மாற்றி அமைத்தார்கள். தொடர்ந்து முறையே அக்கிப்பேட்டை, அலசூர், பிளாக்பள்ளி (டாசுகர் டவுன்) ஆகிய பகுதிகளிலும் தி. மு. க கிளைகள் துவக்கப்பட்டன. பெங்களூரிலும் கோலார் தங்க வயலிலும் ஆறுக்குமேற்பட்ட கிளைகள் ஏற்படவே அத்தனை கிளைகளும் ஒன்றாக நல்ல கட்டுப்பாடுடன் இயங்கும் நோக்கத்தோடு "பெங்களூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். அந்த முதல் அமைப்பின் பொறுப்பேற்கும் பேறு பெற்றவர்கள் தோழர்கள் வே. இளஞ்சேரன் (செயலாளர்) கி. சோழன் (துணைச்செயலாளர்) மு. பாண்டியன் (பொருளாளர்) ஆகியோராவார்கள். சேர சோழ பாண்டியர்கள் குறுகிய காலத்தில் செம்மையாகவும், எதிர்காலத்திற்கு வழி கோலியும் சிறப்பாகப் புரிந்தனர்.

அடுத்துத் தோழர் எ. டி. பிரான்சிசு அவர்கள் செயலாளராகவிருந்து பணியாற்றினார். அவர் காலத்தில்தான் "போராட்டம்" என்று மாற்று கட்சியினரும் பாராட்டிய நமது முதல் மாநாடு நடைபெற்றது. 1954 பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற அந்த மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர்களாக தோழர்கள் எஸ். வி. பதி, எஸ். சே. உசேன் ஆகியோரும் செயலாளர்களாகத் தோழர்கள் எ. டி. பிரான்சிசு செ. விழியன் ஆகியோரும் தோழர்கள் கி. சோழன், வெங்கடசாமி ஆகியோர் விளம்பரச்செயலாளர்களாகவும், தோழர் இராகவன் தொண்டர் படைத் தலைவராகவும் இருந்து பல தொல்லைகளுக்கிடையே இரண்டு மாத காலம் இரவென்றும் பகலென்றும் பாராமல் பணியாற்றி மாநாட்டைச் சிறப்புடன் நடத்தினர். ஒய்வுபெற பெங்களூர் வந்திருந்த சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்கள் மாநாட்டுக் குழுவினருடன் ஒத்துழைத்து அரிய கருத்துக்களை வழங்கியும் மாநாடு வெற்றி வாகை சூட பெரிதும் பணி புரிந்தனர். கருநாடகத்தில் கழகம் வேரூன்றித் தழைக்க இந்த மாநாடு அடிகோலியது.

1955-ம் ஆண்டு பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டத்திற்குத் தலைமையேற்று அன்று நடைபெற்ற தேர்தலைக் கருநாடகம் பெருமைகொள்ளும் அளவிற்குச் சிறப்பாக நடத்தி வைத்தார். தோழர் எஸ். வி. பதி அவர்கள் செயலாளராகவும் தோழர் மா. மன்னர் துணைச்செயலாளராகவும் தோழர் விசயரங்கம் பொருளாளராகவும் தோழர்கள் எ. டி. பிரான்சிசு, எஸ். சே. உசேன் ஆகியோர் பொதுக்குழு உறுப்பினர்களாகவும் அன்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகம் வளருவதற்கான செயல் முறைகளைப்பற்றிப் பொது செயலாளர் அன்று தந்த உரை வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகும். அந்த நேரத்தில் கருநாடகத்தில் இருந்த கிளைக் கழகங்கள் 7 தான். இன்று பெங்களூரில் மட்டும் 54 கிளைகளும், கோலார் தங்க வயலில் 11 கிளைகளும், சித்தல்துர்க மாவட்டத்தைச் சார்ந்த இரியூரிலும், சீமோகா மாவட்டத்தைச் சார்ந்த பத்ராவதியிலும், குடகு மாவட்டத்தைச் சார்ந்த சித்தாப்பூரிலும், சுண்டிகொப்பாலிலும் கிளைகள் பல பெருகியுள்ளன. ஆசன், அரசிக்கரை, சிக்கமகளூர், தாவணகெரை, மைலூர் ஆகிய இடங்களில் நமது முன்னணி வீரர்களின் பெயரில் இயங்குகின்ற மன்றங்களும் அமைத்துப் பணியாற்றி "பதி என்றால் உழைப்பு-உழைப்புஎன்றால் பதி" என்கின்ற அளவு சிறப்பான பணியாற்றி வந்துள்ளார். இன்று கருநாடக மாநிலத்தில் கழக உறுப்பினர்கள் எண்ணிக்கை 3000! இந்த அளவிற்குக் கழகக் கருத்தைப் பரப்பும்பணியிலே ஈடுபட்டுள்ள தோழர் பதிஅவர்கள் ஒரு கன்னடக்காரர் என்பதையும் சொல்லி வைக்கிறேன்.

சலியாத உழைப்பும் ஓயாத தொண்டும் உருவம் பெற்றிருக்கின்றன, கருநாடகத்தில். அந்த உருவமே தோழர் எஸ். வி பதி. வேங்கடபதி என்ற முழுப்பெயர் கொண்ட இவர் பிறப்பால் கன்னடியர். ஆனாலும் மலைஞாலம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் முதலிய பல மொழிகளைத் தெளிவாகவும் விரைவாகவும் பேசவல்லவர். துன்பத்திலும் சோதனைகளிலும் சிரித்துக் கொண்டே செல்லும் இயல்புள்ளவர். எல்லோருக்கும் நல்லவர். இன்று இவர் கருநாடக தி. மு. க. மாவட்டச் செயலாளராக விளங்குவதோடு தி. மு. க. பொதுக்குழு உறுப்பினராகவும் தொண்டாற்றுகிறார்.

—11-ம் பக்கம்—

கருநாடகக் கிளைகள்

★★★ கருநாடக மாநிலத்தில் கழகக் கிளைகள் பெருகி வருகின்றன. 3000 உறுப்பினர்கள் சேர்ந்திருக்கின்றனர்; கிழமைதோறும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவ்வளவு பெரிய வளர்ச்சியின் ஒரு சிறு பகுதியே இது. கருநாடகச் சிறப்பிதழ் வெளியிடப் பெறுவதறிந்து, அனுப்பி வைக்கப்பட்ட கிளைகளின் விவரங்கள் மட்டும் இதில் உள்ளன. விவரம் அனுப்பப் பெறாதவை இன்னும் பல. குறுகிய நாளில் இவ்வளவுதான் சேகரிக்க முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெரியார் நகர்

திராவிட இயக்கம் பெரியார் அவர்களது தலைமையில் தமிழகத்தில் வேகமாகப் பரவத் துவங்கிய காலத்தில் கருநாடகத்தில் பெங்களூரின் வட கோடியிலுள்ள தேவர சீவன அள்ளி என்ற இடத்தில் திராவிட இயக்கத்தின் கிளை ஒன்று துவங்கி நல்ல பணியாற்றி வந்தது. 1946-ல் இவ்வட்டாரத்தில் திராவிடர் கழக மாநாடு நடந்தபோது தேவர சீவன அள்ளி என்ற பெயரை மாற்றி, பெரியார் நகர் எனப் பெயரிடப்பட்டது. 1949 செப்டம்பர் 17-ல் அண்ணா அவர்கள் தி. மு கழகத்தைத் துவக்கியபோது இந்தக் கிளையை தி மு க. கிளையாக மாற்றியமைத்தார்கள். சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதில் இந்தக் கிளை நல்ல பணியாற்றி, நூற்றுக்கணக்கான சீர்திருத்த திருமணங்களை நடத்தி வைத்துள்ளது. தற்போது கிளையின் செயலாளராய், திரு. எஸ். சே. உசேன் அரும்பணியாற்றி வருகிறார். இவர் தலைமைக் கழகப் பொதுக்குழு உறுப்பினரும் கூட.

காடுகொண்டவ அள்ளி

பெங்களூர் நகரத்திலிருந்து நான்காவது கல்லில் அமைந்துள்ள ஒரு கிராமம். பெரும்பாலோர் தாழ்த்தப்பட்டவர்களாக வாழ்கின்ற மக்கள், தி. மு. கழகம் துவக்கிய 17-9-49 முதல் கழகத்தின் உயரியகொள்கையின்பால் ஆர்வங்கொண்டு தங்கள் நிலை உயரவும், "நாட்டு விடுதலையில் தான் அனைவர் வாழ்வும் உள்ளது" என்கின்ற பேருண்மையை நிலைநாட்டவும் பாடுபட்டு வருகிறார்கள்.

அக்கிப்பேட்டை

பெங்களூர் 'சிட்டி''ப் பகுதியில் வ. உ. சி நூல் நிலையமாக இயங்கி வந்த சார்பு மன்றம் 8-1-1950 நாளிலிருந்து தி. மு. க. கிளையாகத் தொண்டாற்றி வருகிறது. இது இவ்வட்டாரத்தில் முதன் முதலாகத் தோன்றிய தி. மு. க. கிளை பிரச்சார விரைவுடன் பல பொதுக்கூட்டங்கள் நடத்திப் பேறு பெற்றதுமான கிளை. மேலும் பல கிளைகள் தோன்றத் தளரா உழைப்பாளர்களை வழங்கிய பெருமை உடையது. தோழர் வி. கே நடேசன் அவர்கள் இக்கிளையின் செயலாளர். பொறுப்பின் முழுப் பொருளுணர்ந்து பணிபுரியும் பண்பாளர் கருநாடக தி. மு. க. இரண்டாவது மாநாட்டின் செயலாளர்களுள்வரில் இவரும் ஒருவர். கன்னட மொழி பேசுவோர் பலரை உறுப்பினர்களாகக் கொண்டு இன்றளவும் திறம்பட இயங்கும் கிளை.

டாசுகர் டவுன்

பெங்களூர் டாசுகர் டவுன் வட்டத்தில் 1953-ம் ஆண்டு துவக்கப்பட்டது. படிப்பகம், இலவச நூலகம், இரவுப்பள்ளி, நாடக மன்றம் ஆகிய துணை அமைப்புக்களுடன் திறம்படச் செயல்படுகின்றது. கருநாடக தி. மு. க. முதல் மாநாடு, அந்த வட்டாரத்தில்தான் நடத்தப்பட்டது. அப்போது இக்கிளையின் செயலாளராக பணியாற்றி வந்த திரு. ஏ. டி. பிரான்சிசு, பி. எஸ்சி. அவர்கள் மாநாட்டுச் செயலாளராகவும், மற்றுமோர் உறுப்பினரான திரு. கி. சோழன் அவர்கள் மாநாட்டு விளம்பரச் செயலாளர்களுள் ஒருவராகவும் இருந்து இரண்டு மாத காலம் ஓய்வில்லாமல் பணிபுரிந்துள்ளார்கள். சென்ற பொதுத் தேர்தலில இந்தக் கிளையின் உறுப்பினர் திரு நாகராசன் போட்டியிட்டார். கண்டோன்மெண்ட் பகுதியில் தற்போது பல கிளைகளின் செயலாளர்கள் இக்கிளையின் இருந்து பயிற்சிபெற்றவர்கள். திரு எச்.எப். வாணன் செயலாளர்.

இலக்குமணபுரி.

பெங்களூர் சிட்டி ரயில் நிலையத்திற்கருகாமையிலுள்ள இப்பகுதியில் 14 6-53ல் சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. கலைத்துறையில் ஆர்வங் காட்டிக் கழகக் கொள்கைகளைப் பரப்பும் பெரு நோக்கோடு பல நாடகங்களை நடத்தியுள்ளார்கள். ஆர்வமுள்ள தோழர்கள் பலர் உள்ளனர். மினர்வா ஆலைத் தொழிற்சங்கத்தின் தலைவர் இந்தக் கிளையின் உறுப்பினர் திரு. அண்ணியப்பன். பொங்கல் விழாவை ஆண்டு தவறாமல் சிறந்த முறையில் நடத்துவதிலும் அவசியம் ஏற்படும்போது பொதுக் கூட்டங்கள் நடத்துவதிலும் தவறுதவர்கள். அண்மையில் இக்கிளையைச் சார்ந்த உறுப்பினர்கள் "தூக்கு மேடை" நாடகத்தை நடத்தி கருநாடக வெள்ள நிவாரண நிதிக்காக ரூ. 01 கொடுத்து பெருமைப்பட்டார்கள். வே இராமலிங்கம் அவர்களைச் செயலாளராகக் கொண்டு சீரிய முறையில் பணியாற்றி வருகின்றது.

இராமச்சந்திரபுரம்

பெங்களூர் மாவட்ட தி. மு க. செயலாளர் தோழர் எஸ். வி. பதி

கழகம் தொடங்கிய நாள்தொட்டு அயராதுழைக்கும் தோழர் எஸ். சே. உசேன், இவர். அமைதியான சுபாவமும் இனிமையான உள்ளமும் உடைய இவர் கருநாடகத்தில் கழகம் கண்டெடுத்த ஒளிமுத்து. கருநாடகத்தில் நடந்த முதல் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றிய இவர், இன்று நம் பொதுக்குழு உறுப்பினர்; பெரியார்நகர்க் கிளைச்செயலாளர்.

ஆறு ஆண்டுகளுக்குமுன் அறிஞர் அண்ணா அவர்களைக் கொண்டு பொதுக்கூட்டம் நடத்துகின்ற வாய்ப்பையும், இலட்சிய நடிகர் எஸ் எஸ் இராசேந்திரன்அவர்களது "மணிமகுடம்" நாடகத்தை நடத்துகின்ற வாய்ப்பினையும் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையும் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களையும் கொண்டு "சிறப்புக் கூட்டம்" நடத்துகின்ற வாய்ப்பினையும் ஒருங்கே பெற்ற கிளை இது. தோழர் முனிசாமி, செயலாளர் பொறுப்பை ஏற்றுப் பணிபுரிந்து வருகிறார்.

சீராமபுரம்

பெங்களூரில் பெருவாரியாகத் தொழிலாளர்கள் வாழுமிடத்தில் "பகுத்தறிவு மன்றமாக" இயங்கி வந்த அமைப்பை 7-2-54-ல் திரு. வே. இளஞ்சேரன் அவர்கள் தி. மு. க. கிளையாகத் துவக்கி வைத்தார். தொழிற்சங்கப் பிரச்னைகளில்

அவர்கள் 4-9-1955-ல் இக்கிளையைத் துவக்கி வைத்தார். பெரும்பாலும் பஞ்சாலைத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கிளைகளில் இந்தக் கிளையும் ஒன்று. தொழிற்சங்கப் பிரச்னைகளில் தனி ஆர்வம் காட்டும் பலர் இக்கிளையிலுண்டு. இரவுப்பள்ளி, படிப்பகம் ஆகிய பயன்தரும் நிலையங்களும் இதன் சார்பில் செயல்படுகின்றன. தோழர் கோபால் இக்கிளையின் செயலாளர்.

இலக்குமிநாராயணபுரம்

பெங்களூரில் தொழிலாளர்கள் பெருவாரியாக வாழ்கின்ற சீராம்புரம் பகுதியைச் சேர்ந்த இந்த வட்டத்தின் கிளை பெங்களூர் மாவட்டச் செயலாளர் திரு. எஸ். வி. பதி அவர்களால் 25-11-'56-ல் துவக்கி வைக்கப்பட்டது. கழகக் கொள்கைகளைக் கன்னட மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் நண்பர் வேந்தன் என்ற கன்னடப் பேச்சாளரை உருவாக்கித் தந்துள்ளது. ஏறத்தாழ 3 ஆண்டுகள் திரு. அழகிரிசாமி அவர்கள் செயலாளர் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்திவந்தார். அண்மையில் அவர் பொறுப்பிலிருந்து விலகியதால் வேறொரு நண்பர் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

சிவன்செட்டி வட்டம்

பெங்களூர் "கண்டோன்மெண்ட்" பகுதியில் மாவட்டச் செயலாளர் எஸ். வி. பதி அவர்களால் 13-4-57 அன்று துவக்கப்பட்டது. பட்டதாரிகளையும், பெரும்பாலும் படித்தவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகிறது. வைதீகர்களின் கோட்டையென அழைக்கப்படும் அவ்வட்டாரத்தில் திறம்படச் செயலாற்றி வருகின்ற காரணத்தால் இன்று அப்பகுதி பகுத்தறிவின் கோட்டையாக மாறி வருகிறது. 'உதயசூரியன் படிப்பகம்" என்ற துணை அமைப்பின் வாயிலாகப் பலர் கழகக் கொள்கைகளைப் புரியும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளனர். பெங்களூர்க்கு வரும் நம் இயக்கத்தலைவர்கள் 'கிளை எந்த முறையில் இயங்கவேண்டும் என்பதற்கு சிவன் செட்டி வட்டக்கிளை ஓர் எடுத்துக்காட்டு" என்று பாராட்டியுள்ளனர். தோழர் தி. திராவிடமணி என்கின்ற ஆர்வமிக்க உழைப்பாளி செயலாளராகப் பணியாற்றி வருகிறார் கருநாடக மாநில இரண்டாவது மாநாட்டின் செயலாளர்களில் ஒருவராக இருந்து பணியாற்றும் வாய்ப்பையும் இவர் பெற்றார்.

சித்தார்த்த நகர்
(15-வது வட்டம்)

டாக்டர் இராயன் சாலைக்கருகாமையிலுள்ள சித்தார்த்த நகரில் 17-10-1957-ல் திரு எஸ். வி. பதி அவர்கள் தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. பாட்டாளி மக்களே பெரும்பாலும் வாழ்கின்ற இந்தப் பகுதியில் கழகம் ஆற்றிவருகின்ற பணி பெரிதாகும். பல ஆண்டுகளாக இயக்கத்தில் பணிபுரிந்து வருபவரும் மாவட்டத் துணைச்செயலாளராக இரண்டாண்டுகள் பணிபுரிந்தவருமான நண்பர் மா. மன்னர் தற்போது இந்தக் கிளையின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்களில் ஒருவர். அண்மையில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்த கிளையின் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கவுடன்பேட் (காட்டன்பேட்)

முழுவதும் கன்னட மக்களே வாழ்கின்ற கவுடன்பேட் என்ற பகுதியில், "மக்கள் படிப்பகம்" என்ற பெயரால் இயங்கி வந்த அமைப்பை 16 2-58 அன்று தோழர் பதி அவர்கள் தலைமையில் தி மு. க. கிளையாக மாற்றி அமைக்கப்பட்டது. படிப்பகம் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நாடகங்கள் மூலம் கன்னட மக்களுக்கு நமது கொள்கைகளைச் சிறப்பான முறையில் எடுத்துச் சொல்லுதல் ஆகியவற்றின் வழி எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்று வரும் இந்தக் கிளையின் செயலாளராக, திரு. செயராமன் இருந்து பணியாற்றி வருகிறார்.

— 8-ம் பக்கம் —

கருநாடக நினைவுகள்

கே. ஏ. மதியழகன். பி.ஏ.

கடந்த மேத்திங்களில் பெங்களூரில் நடைபெற்ற கேரள, கருநாடக, ஆந்திர மாநிலங்களில் தி. மு. கழகப் பிரச்சார அமைப்புக் குழுவின் கூட்டத்திற்காகக் கருநாடகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மத்தியில் கலந்து பழகும் வாய்ப்பை ஒரு வாரம் பெற்றேன். அவர்களின் கொள்கை உறுதியும், பொங்கும் ஆர்வமும் என் நெஞ்சில் நீங்காத இடத்தை பெற்றன.

கருநாடகத்தில் கழகம் வளரும் வாய்ப்பு நிறைய உள்ளது அதற்குத் தூண்டுகோலாக உள்ள தோழர்களின் தொண்டு நாளும் வளர்ந்து வருகிறது. சில நினைவுகளை இங்கே தீட்டியுள்ளேன்.

பெங்களூர் நகரத்தைச் சேர்ந்த அலசூர் பகுதியிலே அன்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம். நானும் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசுவும் பெங்களூர் மாவட்ட தி. மு. க செயலாளர் பதியும் பேசுவதாக இருந்தது. நல்ல பரந்த மைதானம். அழகான மேடை அமைத்து ஒளி, ஒலி அமைப்புகளால் நிரப்பினார்கள். மணி ஐந்தரையிருக்கும். பெருங்கூட்டம்;ஐயாயிரத்திற்கு மேல் திரண்டுவிட்டது திடீரென்று மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. வானம் பொத்துககொண்டது. பெரு மழை, ஒரு மணி நேரம் ஓயவில்லை; கூட்டம் சிதறியது. மணி ஆறரை இருக்கும். சி. பி. சி அவர்களும் நானும் பதியும், நண்பர்களைச் சந்தித்தாவது ஆறுதல் சொல்லி வருவோம் என்ற கருத்தில் கிளம்பினோம். நாங்கள் சென்ற வண்டி நகருவதே சிரமமாய்விட்டது. பாதைகளெல்லாம் கால்வாய்களாக மாறி ஓடிக்கொண்டிருந்தன. ஒருவாருகப் பொதுக்கூட்டம் நடத்தும் இடத்தை அடைந்தோம். மைதானத்தைக் காணோம். ஒரு பெரிய குளம். அதன் மத்தியில் தெப்பம்போல் கூட்டத்திற்கு அமைக்கப்பட்ட மேடை. யாரையும் காணோம். நிசப்தம் நிலவியது. நேராகக் கழக அலுவலகம் சென்றோம். பதினைந்து நிமிடங்கள் ஆகியிருக்கும். மழை கொஞ்சம் விட்டிருந்தது. அலுவலகத்தில் இருந்த தோழர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தோம். அவர்களிடம் விடை பெற்று நாங்கள் தங்கியிருந்த இருப்பிடத்திற்குச் செல்வதற்கு கிளம்பினோம். ஒரு தோழர் மேல்மூச்சு வாங்க ஓடி வந்தார். "கிளம்புங்கள்! கூட்டம் ஆரம்பமாகப் போகிறது" என்றார்.

இப்படிப்பட்ட ஆர்வங்களில் பல ரகத்தை நெடுநாளாக உணர்ந்த சி. பி. சி. அவர்கள் "எப்படி கூட்டம் நடக்கும். மக்கள் வேண்டாமா?மைக்கைக் கட்டிவிட்டால் போதுமா?" என்றார். அவர் வார்த்தைகளில் அனுபவம் குழைந்திருந்தது.

"மக்கள் கூடிவிட்டார்கள். வந்து பாருங்கள். நீங்கள் வரவேண்டியது தான்" என்றார் வந்த நண்பர் மீண்டும். சி. பி. சி. அவர்கள் கட்சியே எனக்கும் நியாயமாய் பட்டது.

அந்த நண்பர் தனது ஆர்வத்தையே அளவுகோலாக்க விரும்புகிருர் என்று கருதினேன். அவரை திருப்திப் படுத்துவதற்காக சி. பி. சி. யை நோக்கி "மீண்டும் ஒருதடவை நாம் அங்கே சென்று திரும்புவதில் அவருக்கு மனஅமைதி. அதையேன் கெடுக்கவேண்டும்? சென்றுவிட்டு இருப்பிடம் போவோம்" என்றேன்.

வந்த நண்பரின் முகத்திலே பிரகாசம் தென்பட்டது பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை அடைந்தோம். குளத்தைக் காணோம். தெப்பத்தைக் காணோம். முழங்கால் ஆழ நீரில் நாலாயிரம், ஐயாயிரம் மக்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். மேடையின்மீது கழகப்பாடலை ஒரு தோழர் பாடிக்கொண்டிருக்கிறார். கூட்டம் துவங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. எங்களை அழைத்துச் சென்றவர், எங்களைப் பார்த்த பார்வை "பார்த்தீர்களா. நான் கூறியது பொய்யா?" என்று அறைகூவல் விடுவதுபோல இருந்தது

எங்கிருந்து வந்தார்கள்? எப்படி வந்தார்கள்? சிறு தூறலிலும் இப்படி ஏன் மொய்க்கவேண்டும்? இந்தக் கேள்வியை எங்கள் மனதிற்குள்ளே கேட்டுக்கொண்டோம். இன்னமும் ஆயிரம் முறை கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் தொடர்ந்து மூன்றுமணி நேரம் நடக்கிறது. சிந்தனைச் சிற்பி சி. பி. சி. அவர்களும் நானும் பேசினோம். யாரும் அந்தக் கடும் குளிரில், சிறு தூறலில், நகரவில்லை. எத்தனையோ கூட்டங்களில் கலந்துகொள்கிறோம். பல நினைவுகள் பதிகின்றன. ஆனால் இந்தக் கூட்டம் என் மனதில் என்றும் பசுமையாக இருக்கிறது. அது எழுப்பிய கேள்வி இன்னும் ரீங்காரம் செய்கிறது. எந்த ஜீவசக்தி அவர்களைக் கவர்ந்தது? புற்றீசல் போல் எப்படி அவ்வளவு பேரும் கணநேரத்தில் திரண்டனர்? இந்தக் கேள்விகளுக்கான விடையில் கருநாடகத்தில் மலர்ந்துவரும் விடுதலை இயக்கத்தின் எழுதப்படாத வரலாறு தென்பட்டது. கருநாடகத்தில் நமது கருத்து விதைகளைத் தூவுவதற்கான நல்ல செம்மையான நிலம் உள்ளது. தமிழ் பேசும் தோழர்கள் மத்தியிலே மட்டும் நடமாடிய கொள்கைகள் கன்னட மக்களையும் கவர்ந்திருக்கின்றன. கழகக் கொள்கை வளர்ச்சிக்கான வழிவகைகளை எடுத்துச் சொன்ன நூற்றுக்கணக்கான தோழர்களின் கருத்தில் அவர்களை ஆட்கொண்டுவிட்ட இலட்சியத்தின் ஒளி மின்னியது. நமது கருத்துக்களுக்கு தங்கள் ஏடுகளிலே இடமளிப்பதே தகாத காரியம் என்று கருதிய பத்திரிகை வட்டாரத்திலே பெரும் மாறுதலைக் காணமுடிந்தது.

நாங்கள் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மைசூர் மாநிலத்திலுள்ள எல்லா முக்கிய பத்திரிகை நிருபர்களும் கலந்துகொண்டனர். 'டெக்கான் ஹெரால்ட்' 'பிரஜா வாணி' 'ஜனவாணி', சம்யுகத கர்நாடகா' 'தாய்நாடு', 'பிரபஞ்சா', 'இந்து' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய பத்திரிகை நிருபர்கள் கலந்துகொண்டனர். திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை, கோட்பாடுகள் குறித்து நல்ல வகையில் பிரசுரித்திருந்தனர்.

நாங்கள் மைசூர் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா, முன்னாள் நீதிபதி மேடப்பா போன்றவர்களைச் சந்தித்ததால் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகம் குறித்தும் எவ்வளவு மதிப்பு வைத்துள்ளனர் என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

கன்னடத்திலேயே கட்டுரைகள் எழுதுகிறார்கள். சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. அதனை கவனிக்கும் தொகை வளருகிறது. நான் பேசிய ஒரு கூட்டத்தில் கன்னடநாடு ஆசிரியர் தோழர் இராமன் கன்னட மொழியில் நமது கொள்கைகளை எடுத்துரைத்தார். ஆற்றொழுக்குப் போன்ற அவர் பேச்சை மக்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தார்கள்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட இந்துஸ்தான் மெஷின் டூல்பேக்டரி என்றநிறுவனம் பெங்களூரில் உள்ளது. கருவிகளை செய்யும இன்சினியர்கள், திறமை மிக்க தொழில் நுட்பம் உணர்ந்தோர் பல்லாயிரவர் பணியாற்றும் இந்த நிறுவனத்தில், இலக்கிய வளர்ச்சி கருதி தமிழ், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மொழிக் கழகங்கள் அமைத்து நல்ல வகையில் பணியாற்றி வருவதைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். தமிழ் மன்றத்தாரின் அழைப்புக்கிணங்க இலக்கிய சொற்பொழிவொன்று நிகழ்த்தினேன். அங்கே நான்பார்த்த ஆர்வம் நான் படித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை என் மனக்கண் முன்னாலே கொண்டு வந்து நிறுத்தியது.

பம்பரம்போல் சுழன்று ஓடியாடிப் பணியாற்றும் பெங்களூர் மாவட்டச் செயலாளர் எஸ். வி பதி, நெடுநாளையத் தோழர் உசேன், இன்னும் இளஞ்சேரன். சோழன், கன்னடநாடு ஆசிரியர் இராமன்போன்ற நல்ல வாலிபர்கள் துடிதுடிப்புடன் பணியாற்றுகின்றனர். கோலார் தங்க வயலில் தங்கம் தோண்டும் தோழர்கள் மனதில் நமது தங்கநிகர் கொள்கைகளை பதித்து வைத்துள்ளர். இரியூர், பத்ராவதி, அரிசிக்கரை போன்ற இடங்களெல்லாம் கழகப் பாசறைகள் உருவாகிக்கொண்டுள்ளன.

பெங்களூருக்கு நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள இரியூரில் அன்று கூட்டம். நானும் தோழர் உசேனும் பஸ்மூலம் கிளம்பினோம். மாலை இரியூர் சேர்ந்தோம். நெடுந்தொலைவில் எப்போதோ கோவை மாவட்டத்திலிருந்து குடியேறிய விவசாயிகள் கன்னடமக்களாகவே மாறிக் கலந்து, வாழ்க்கை முறையில் செல்வாக்குப் பெறறு வாழ்கின்றனர். அந்தக் குடும்பங்கள் நமது கொள்கையிலே கொண்டுள்ள பாசமும் பற்றும் நமது இயக்கத்திற்கு அந்த வட்டாரத்திலே நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்துள்ளன. பொதுக்கூட்டம் என்றால் திருவிழாபோல்கொண்டாடுகிறார்கள். கூட்டத்தை முடித்துக் கொண்டு மறுநாள் காலை பத்து மணிக்கு நாங்கள் பெங்களூரில் இருக்க வேண்டும். நிலைமையைச் சொன்னோம். நாலு மைல் தூரம் போனால் பெரிய பாதை உண்டு என்றும் அங்கேயிருந்து லாரிகள் போகும் என்றும், அவர்களைக் கேட்டுக்கொண்டு பெங்களூர் போய்ச் சேரலாமென்றும் கூறினார்கள்.

கூட்டம் முடிந்தது. 'குதிரை வண்டி' வருகிறது என்றார்கள். அரை மணி நேரம் கழிந்து அந்த ஊரில் இருந்த இரண்டு குதிரை வண்டிகளும் வெளியூர் சென்றுவிட்டன என்ற தகவல் வந்தது. பிறகு ஒரு கட்டை வண்டியை ஓட்டி வந்தார்கள் (கூடு இல்லாதது.) மழை மிரட்டிக்கொண்டிருந்தது. அந்த வண்டியில் நானும் தோழர் உசேனும் மற்றும் இரண்டும் நண்பர்களும் ஏறி அமர்ந்தோம். மழை வரக்கூடும் என்று குடை கொடுத்தனுப்பினார்கள் இருந்தாலும் போய்விடலாம் என்ற நம்பிக்கையில் கிளம்பினோம் பாதி வழி போயிருப்போம். பெரு மழை இடி, மின்னல் வண்டி விளக்கு அணைந்துவிட்டது. பாதை தெரியவில்லை. குடை பறக்கிறது. மாடுகள் நகர மறுக்கின்றன. திரும்பினாலும் அதே தூரம் வழியிலே நிறுத்துவதற்கோ, இறங்குவதற்கோ இடமில்லை. இரண்டு மணி நேரம் கழித்துப் பெரியபாதைச் சந்திப்பை அடைந்தோம். உடம்பெல்லாம தொப்பையாக இருந்தது. எல்லோருடைய உடைகளும் நனைந்திருந்தன. உடல் முழுதும் ஒரே நடுக்கம்.

லாரி ஒன்று வந்தது. மழை நிற்கவில்லை. டிரைவருக்குப் பக்கத்திலேயுள்ள இடத்தில் இருவரையும் ஏற்றிக்கொண்டார். டிரைவருக்கு எதிரே இருக்கும் மறைப்பு கண்ணாடி உடைந்திருந்தது. மழை முழுதும் உள்ளே கொட்டியது ஏற்கெனவே நடுங்கிக்கொண்டிருந்த எங்களுக்கு சவுக்கால் அடிப்பதுபோல் மழை எங்களைத் துண்டித்துக்கொண்டிருந்தது. அத்தோடு லாரியின் வேகமும் சேர்ந்துகொண்டது. பாதி வழியில் டும்கூர் என்ற நகரையடைந்ததும் விடியற்காலை மூன்று மணிக்கு "இங்கேயே இறங்கிவிடுங்கள். பெங்களூருக்குள் அழைத்துச் செல்லக்கூடாது" என்று இறக்கிவிட்டு விட்டார் டிரைவர். மழை விட்டிருந்தது. பெரிய நகரம் தெருவில் ஆள் அரவமே காணோம். அந்த நிசபத நகரில் ஒருமணி நேரம் அலைந்து கடைசியாகப் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம அவ்வளவு பெரிய ஊரில் ஒருமணி நேரம் எந்தப் பாதையிலும் ஒரு ஆள்கூட அகப்படவில்லை புகைவண்டி நிலையத்தில் ரயிலும் சரியான நேரத்தில் வரவில்லை. வாடைக்காற்றிலேயே விடியுமட்டும் விழித்திருந்து காலை பெங்களூர் வந்து சேர்ந்தோம்.

உடன்வந்த தோழர் உசேன் எனக்காகப் பரிதாபப்படுவதுபோல் இருந்தது.

பஸ், கட்டைவண்டி. லாரி, ரயில் ஆகியவை கண்ட பயணம் முடிந்தது.

நான் யோசித்துக்கொண்டிருந்தேன்! "பழைய சுயமரியாதைக் கூட்டங்களுக்கு ஏற்படும் சிரமம் போல் இல்லையா?" என்றார். நிறுத்தாமல் "எளிதாகச் சொல்லிவிடுகிறார்கள், கூட்டத்தில் பேசிவிட்டால் போதுமா என்று! இந்த ஒருநாள் அனுபவத்தையேகூட தாங்கமாட்டார்கள்!" என்று முடித்தார்.

நான் சிரித்தேன். என்னுடைய சிந்தனை நமது சேதிகளைப் பரப்புவதற்கு எண்ணற்றோர் ஏற்றுக்கொண்ட – ஏற்றுக்கொள்கிற இன்னல்களையும்–இடர்பாடுகளையும் எண்ணிக்கொண்டிருக்கிறது. ★

பன்மொழிப்புலவர்
உருசியா செல்கிறார்
ஆகஸ்ட் திங்களில்!
விவரங்கள்
அடுத்த இதழில்!

புதிய பொம்மைத் தேர்வு

மா. பாண்டியன்

எழுதிய

இத்தாலியில் நம் நாளில் உலவிய முசோலினி ஒரு சர்வாதிகாரி. அரசனிருப்பினும் அவனே ஆண்டான்!

நேபாளத்தில் கொஞ்ச நாள்களுக்குமுன்வரை இராணாக்கள் எனப்பட்ட அமைச்சர்களின் கைகளிலேதான் ஆட்சி இருந்தது! மன்னர்கள் வெறும் பொம்மைகளாகவே இருந்தனர். ஒரு ஆங்கில மருத்துவச்சி அங்கு மருத்துவம் பார்க்க வந்து அரச குடும்பத்தினரின் அதிகாரத்தை மீட்டுத் தந்தாள்.

இதேபோலத்தான் ஐதரின் கதையும். சாதாரணப் படை வீரனாக மைசூர்ப் படையில் சேர்ந்த அவன், நாளடைவில் அந்நாட்டையே ஆட்டுவிக்கும் எல்லாம் வல்ல சர்வாதிகாரியானான். மன்னன் பெயருக்கிருந்தான். ஆனால் ஆணைகள் இடுவதும் அரசை ஆட்டிப் படைப்பதும் ஐதரின் காலடியில்தான் கிடந்தன. மணிமுடிகளை உருட்டுவதும், மண் பொம்மைகளைத் தூக்கி வைப்பதுபோல், ஆள் மாற்றி ஆளை ஆட்சி பீடங்களில் தூக்கி வைப்பதும் அவன் பொழுதுபோக்குகளாய் இருந்தன.

சதுரங்கக் காய்களாக, உயிரும் உணர்ச்சியுமுள்ள உடல்களை உருட்டி விளையாடிய அவனுக்கு அன்றொரு சோதனை நாள் வந்து முட்டியது.

எங்கோ கலம் கவிழ்ந்ததோ, தெரியாது! அவன் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு, சிந்தனையூரில் அலைந்தான்...

எங்கோ இருந்து எப்படியோ இந்த இடத்திற்கு வந்துவிட்டான். மனிதன் கெட்டுப்போனாலும் உயர்ந்துவிட்டாலும் அவனவனுக்குப் பின்னே குடும்பக் கதை ஒரு மூட்டை கிடக்கும். ஐதருக்குப் பின்னேயும் ஒரு மூட்டைக் கதை கிடந்தது.

முகமது நபி பிறந்த குடும்பமான கொரிசுக் குடும்பத்தில் பிறந்த — வழங்கிவரும் கதைப்படி — பாரோ ஓர் அசன் பாக்தாதிலிருந்து ஆசுமீர்க்கு வந்துவிட்டான். அந்த அசன் யகாவின் வழிவந்தவனும், வடஇந்தியாவுக்கு வந்துவிட்ட அசனின் மகன் வாலிமுகமது மேலும் தெற்கு நோக்கி குல்பர்காவுக்கு வந்து குடியேறினான். அங்கு அவன் பெற்றெடுத்த அலி முகமது கிழக்கு மைசூரில் உள்ள கோலார் நகரத்து வந்து சேர்ந்தான். அங்கு நான்கு பிள்ளைகளைப் போட்டுவிட்டு அவனும் மாண்டான். அந்நால்வருள் இளையவனான பதே முகமதுவுக்கு 1717-ல் பிறந்தவன்தான் ஐதர் அலி. 1749 ம் ஆண்டில், தன் முப்பத்திரண்டாம் வயதில் மைசூர்ப் படையில் சேர்ந்தான் அவன், மூத்த அண்ணன் சாபாசின் துணையால்.

தொடக்கத்தில் சாதாரணப் படை வீரனாகச் சேர்ந்த அவன் வாய்ப்புகள் வருமென்று காத்திருக்கவில்லை, தானே வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டான். அவனது துடிப்பு நிறைந்த மறச்செயல்கள் அமைச்சன் நஞ்சராசனின் பார்வையை ஈர்த்தன. அவனது மறச்செயல்களுக்கு ஊக்கம் அளிப்பதுபோல், அவனுக்குப் பதவி உயர்வு தந்தான். ஐதரின் செல்வாக்கு உயரத் தொடங்கிற்று.

நாசர்சங் ஐதராபாத் நைசாமாக முயன்று, கேட்பாரற்றுக் கிடந்த ஐதராபாத் அரியணையில் ஏறினான். ஆனால் நாசர்சங்குக்குப் போட்டியாக மற்றொருவன் பிரஞ்சுத் துணையுடன் கிளம்பினான். நாசர்சங்குக்கு ஆதரவு தருவதற்காக நஞ்சராசனின் கட்டளைப்படி ஐதரின் தலைமையில் மைசூர்ப் படை ஒன்று சென்றது.

அந்தப் படையும் நாசர்சங்கும் சேர்ந்தெதிர்த்தும் பிரஞ்சுத் தரப்பின் கை ஓங்கியது. நாசர்சங் பிடிபட்டான்; வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டான். செருமுகத்தில் ஐதருக்குத் தோல்வியென்றாலும், வேறொரு வகையில் அவன் பயனைத் தேடிக்கொண்டான். நாசர்சங்கின் சொத்துக்கள் மறைத்து வைக்கப்பட்ட இடத்தைத் தெரிந்து அவை அனைத்தையும் கைப்பற்றிக்கொண்டான். கையில் பணம் சேர்ந்ததும் அவன் பக்கத்தில் பலமும் சேர்ந்தது. 1500 குதிரை மறவர்களும் 3000 காலாட்படை வீரர்களும் அவன் பக்கம் உருவாயினர். தக்கணத்துப் பார்ப்பான் காந்தாராவைத் தனது துணையாளாக வைத்துக்கொண்டான். மைசூர் அரசின இராசப் பிரதிநிதியாகச் சிக்க கிருட்டிணராசன் ஐதருக்கு, பதே ஐதர் பகதூர் என்ற பட்டத்தைத் தந்தான். அவன் இட்டதே சட்டமாயிற்று. அரச குடும்பம் அவன் சுண்டுவிரலில் ஆடியது!

அமைச்சன் நஞ்சராசனின் அதிகாரம் பெருகுவதைக் கண்டஞ்சிய அரசனும் அவன் தாயும் அவனை வீழ்த்திவிடும்படி ஐதரைத் தூண்டினர். நஞ்சராசனைவீழ்த்திய தானே சர்வாதிகாரியானான் அவன். ஆனால் வெகு விரைவில் நஞ்சராசனைத் தேவலாம் என்றாக்கிவிட்டான், அவன். அதிகாரத்தைத் தன் கைக்குள் வளைத்துப் போட்டுக்கொண்டு உச்சநிலைக்கேறிய அவன், தன் பாதையில் தடைகல்லாய் நின்ற காந்தாராவைக் கூடச் சாய்த்துவிட்டான். அது தனி ஒரு கதை.

★

பெங்களூரில் இருவர் சைக்கிள்களில் சுற்றிக்கொண்டே கழகப் பணியாற்றுகின்றனர் எனில் அவர்களுள் ஒருவர் எஸ். வி. பதி. அடுத்தவர் முசிறிப்புத்தன்.

கழகத்தின் கருத்துக்களைக் கலை மேடைகளிலும் பரப்பும் இவர் நம் பொதுக்குழு உறுப்பினர் அத்தோடு (பெங்களூர்) நகரக் கலைக்கழகத்திற்கும், வள்ளலார் இரவுப்பள்ளித் தலைவராயிருக்கிறார். வில்லுப்பாட்டுப் பாடுவதில் திறன் மிகுந்தவர்; இவரது குழுவின் பெயர் கலைவாணர் வில்லுப்பாட்டுக் குழு.

★

திண்டுக்கல்லுக்கு அனுப்பப்பட்டான் அவன். சென்றதும், திண்டுக்கல் கோட்டையைப் பலம் வாய்ந்ததாக்கினான், பாண்டிச்சேரியிலிருந்த பிரஞ்சுக்காரர்களின் துணையுடன். இப்படிப் பன்னூறு நிகழ்ச்சிகள் அவனைவெற்றி மாளிகைக்கு ஏற்றிச்சென்றன.

மைசூர் அரசின் கருவூலம் வந்த வருக்கெல்லாம் கப்பம் கட்டிக் கட்டிக் காலியாகியது. இதற்கிடையே சம்பளம் தராததற்காக மைசூர்ப் படைஞர்கள் கலகம் செய்தனர். ஐதர்அலி திண்டுக்கல்லிருந்து வரவழைக்கப்பட்டான். அவன் படைஞர்களை ஒடுக்கி அவர்கள் எண்ணிக்கையைக் குறைத்து அமைதியை நிலைநாட்டினான். அடுத்து வந்த மராத்தியப் படை எடுப்பையும் தவிர்த்துக் குறைந்த கப்பத்துடன் அவர்களைத் திருப்பி அனுப்பினான். இந்தச் தீரச்செயல்களுக்கெல்லாம் விருதாக, அன்றைய மைசூர் அரசன்

இப்படி அரச வம்சத்தாரை பொம்மைகளாக்கிவிட்டு, அரசமென்பதறியாது உலவினான். ஆனால் அகண்ட மைசூரை உருவாக்குவதற்காக அவன் சந்தித்த செருமுகங்களும் சிந்திய குருதித் துளிகளும் கொஞ்ச நஞ்சமில்லை. பலரை ஆட்டிவைத்த அவன் கைகள் கன்னத்திற்கு முட்டுக் கொடுத்துக்கொண்டிருந்தன

கி. பி 1776! 27 ஆண்டுகள் ஓடிவிட்டன அவன் மைசூர் அரசில் நுழைந்து. ஆண்டுகொண்டிருந்த அரசன் சாமராச உடையார் மாண்டுவிட்டார். அவனுக்குப்பின் பட்டம் ஏற்கச் சந்ததி ஏதும் இல்லை. இனி எவனை அரசனாக்குவது? யாருக்கு அரசனாகும் உரிமை? அரச குடும்பத்தைச் சேர்ந்த பலர் "நான்! நான்!" என முன்வந்தனர். யாரை அரசனாக்குவான் அவன்?

"ஏன் பிறனை அரசனாக்கவேண்டும்? அவனே அரசனாகிவிட்டால்...?"

இப்படிப் பலர் கேட்டனர் ஆனால் ஏனோ அவன் அதை விரும்பவில்லை! சிலருக்கு அரசனாக இருந்து ஆள்வது ஆனந்தம்: ஐதருக்கோ அரசர்களை ஆட்டிவைப்பதில் தான் ஆனந்தம்! அப்படியும் இருக்கலாம்! ஆனால் அவன் மூளை இப்போது ஒரே கேள்வியைச் சுற்றிச் சுழன்றது. அரசக் குடும்பத்தைச் சேர்ந்த பல பிள்ளைகள் இருக்கின்றன. எந்தக் குழந்தையை அரசனாக்குவது? ஆட்சிப்பீடத்தில் எந்தக் குழந்தையையும் உட்கார வைத்துவிடமுடியுமா? "இம்.. இப்படித்தான் செய்ய வேண்டும்!" என்றவாறே அரண்மனைக்குள் நுழைந்தான்; அரச குடும்பத்துப் பிள்ளைகளை எல்லாம் அழைத்துவரச் சொன்னான்.

தன் தன் பிள்ளைக்குத்தான் அரசு எனக் கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்த பெற்றோரெல்லாம் தம் குழந்தைகளைக் கொண்டு வந்து அந்த அறையில் விட்டனர். சிலருக்கு அவநம்பிக்கைகூட, அக்குழந்தைகளைப் பூண்டோடு அழிப்பதற்குத்தான் அவன் அழைக்கிறானோ என்று. என்றாலும் ஐதரின் ஆணையை மறுக்கமுடியாது அவர்கள் அனைவரும் அங்கே குழந்தைகளுடன் வந்தனர். குழந்தைகள் சில அவனை நோக்கிச் சிரித்தன. சில வானத்தைப் பார்த்தன. சில தாய் தந்தையரைப் பார்த்தன. ஐதரோ அந்தக் குழந்தைகள் அனைவரையும் பார்த்தான். அத்தனையும் அரச குடும்பத்து ஆண் குழந்தைகள். ஐதரின் விழிகள் ஒருமுறை சுழன்றன.

திடீரென சில பொருள்கள் உருண்டன. விளையாட்டுப் பொம்மைகள், அணிமணிகள் முதலியவை அவை. அவற்றினூடே ஒரு குத்துவாளும் கிடந்தது. தம் எதிரே சிதறப்பட்ட பொருள்களைக் கண்டதும் குழந்தைகள் விரைந்தோடின. எத்தனை எத்தனை விளையாட்டுப் பொம்மைகள்? என்ன என்ன வகையான அணிகள்? குழந்தைகளின் மனம் சிலிர்த்து ஒவ்வொன்றும் ஓடின. ஒவ்வொன்றை எடுத்தன. அவை எல்லாம் விளையாட்டுப் பொம்மைகளும் அணிமணிகளும்தான். பொருள்களை எடுத்ததும் அவற்றின் முகங்கள் மலர்ந்தன. ஐதரின் முகம் மட்டும் மலரவில்லை. அவன் பார்வை திடீரென்று திரும்பியது.

அதோ, சாமராசன் என்ற அந்தக் குழந்தை மட்டும் விதிவிலக்காய் நிற்கிறதே! அடடே! அது எடுத்திருப்பது குத்துவாளை! எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு என்ன அழகாய் நிற்கிறது!

ஐதரின் சஞ்சலமெல்லாம் தீர்ந்துவிட்டது. மன்னர் குல வழக்கம் போல், கேளிக்கைகளையோ பணத்தையோ நாடாது வீரத்தில் திளைக்கும் ஒருவனைப் பார்த்துவிட்டான்.

அக்குழந்தையை ஆசையோடு தூக்கி உச்சி மோந்தான். மாண்ட மன்னனின் பெயரே அக்குழந்தைக்கும்!

கைம்மையில் கிடந்த அரசியை அழைத்தான்.

"அரசியாரே! இனிமேல் இவன்தான் மன்னன். இவனைத் தத்தெடுத்துக்கொள்ளுங்கள்! வீரம் விளையாடும் நெஞ்சம்தான் மைசூர் அரியணைக்குத் தேவை!" என்று சொன்னான்.

அவளும் அப்படியே செய்தாள். ஐதருக்கும் கவலை தீர்ந்தது.

"மைசூர் அரியணையை உண்மையிலேயே கைப்பற்ற ஐதர் நினைத்திருப்பானானால் இவன் வீரம் விளையாடுபவனை அரியணைக்குக் கொண்டு வந்திருப்பானா?" என்ற கேள்வியை இன்றும் கிளப்பிவிடுகிறது, இந்த நிகழ்ச்சி!

★

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

காட்டன்பேட்டை (7-வது வட்டம்)

14-1-59 அன்று பெங்களூர் தோழர் பதி அவர்கள் இக்கிளையைத் துவக்கி வைத்தார். உள்ளூர்க் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் அடிக்கடி இக்கிளையைப் பார்வையிட்டு அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள். கன்னட மக்கள் பெருவாரியாகவுள்ள இப்பகுதியில் கன்னடியர்களும் தமிழர்களும் மனமொத்து வாழ இக்கிளையைச் சார்ந்த தோழர்கள் பாடுபட்டு வருகிறார்கள். கிளைச் செயலாளர் தோழர் வெங்கடேச்.

கிலாரிரோடு (11-வது வட்டம்)

கன்னட மக்கள் பெருவாரியாக வாழ்கின்ற இப்பகுதியில் 14-1-1959 அன்று தோழர் பதி இக்கிளையைத் துவக்கி வைத்தார் கழகக்கொள்கைகளைக் கன்னட மொழியில் பேசவும் எழுதவும் பல தோழர்களை இக்கிளை ஊக்கியுள்ளது. நல்ல முறையிலே படிப்பகம் ஒன்றை நிறுவிச் சிறப்பான முறையில் நடத்திவருகிறார்கள். கிளையின் செயலாளராகத் தோழர் அரங்கண்ணு திறமையாகப் பணியாற்றி வருகிறார்.

13-வது வட்டம்

வைதிகர்களின் எதிர்ப்பு அதிகமாகவுள்ள இப்பகுதியில் ஒருவருடத்திற்குமுன் கிளைக்கழகம் ஒன்றைப் பல எதிர்ப்புகளுக்கிடையே நடத்தி வருகிறார்கள். கலை ஆர்வம் கொண்ட பல தோழர்கள் "அண்ணா நாடக மன்றம்" என்ற துணை அமைப்பு ஒன்றை நிறுவிக் கழகக் கருத்துக்கள் கொண்ட "மறுமணம்" என்ற நாடகத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். அண்மையில் அப்பகுதியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் முகவை. ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் கலந்துகொண்டு கழகக் கருத்துக்களை விளக்கினார். கிளையின் பொறுப்பாளராக எஸ். மணி பணியாற்றி வருகிறார்.

கோடஅள்ளிக் கிளை

இந்துத்தான் விமான நிலையத்திற்கு அருகாமையிலுள்ள பெரும்பாலான கன்னட மக்களும்-தமிழ், தெலுங்கு பேசுகின்ற மக்களும் வாழ்கின்ற இப்பகுதியில் 24-5-59 தோழர் திராவிட மணி துவக்கி வைத்தார். கன்னட மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தோழர் நாராயணனைச் செயலாளராகக் கொண்டு சீரிய முறையிலே பணியாற்றி வருகிறது. தமிழகத்திலிருந்து அண்மையில் வருகை தந்த நம் கழகப் பேச்சாளர்கள் பலர் கிளையைப் பார்த்துப் பாராட்டினர். அண்மையில் சென்னை முன்னாள் மேயர் திரு. அ. பொ. அரசு இந்துத்தான் விமான நிலையத்தைப் பார்வையிட்டுத் திரும்பும்போது அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அரசு அவர்களுக்குச் சிறந்த வரவேற்பை அளிக்கும் நல்லதோர் வாய்ப்பைப் பெற்றனர்.

இராசாசி நகர்.

பெங்களூரின் மேற்கு எல்லையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இப்பகுதியில் 7-6-59 அன்று எஸ். வி. பதி தலைமையில் இந்தக் கிளை துவக்கப்பட்டது. முழுதும் தொழிலாளர்களே வாழ்கின்ற இந்தப் பகுதியில், கிளை தனது ஓயாத பணியினால் நல்ல செல்வாக்கைப் பெற்று வருகிறது.

திம்மைய்யா சாலைக் கிளை (42-வது வட்டம்)

5-7-1959 அன்று திம்மைய்யா சாலைக் கிளைக் கழகத்தை மாவட்டச் செயலாளர் துவக்கி வைத்தார். பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களையே கொண்ட அந்தக் கிளை வட்ட மக்களின் பெரும் பாராட்டுதலைப் பெற்றுச் சிறப்பான முறையில் இயங்கிக்கொண்டு வருகிறது. பொதுக்கூட்டங்கள் நடத்தி மக்களை அரசியல் விழிப்புபெற செய்துவருகிறது. தோழர் செயராமன் இந்தக் கிளையின் செயலாளர்.

நேருபுரம் (41-வது வட்டம்)

கண்டோன்மெண்ட் பகுதியில் "நாவலர் மன்றம்" என்ற பெயரில் இயங்கிவந்த அமைப்பு 19-7-59 அன்று மாவட்டச் செயலாளர்தலைமையில் தி. மு. க. கிளையாக மாற்றி அமைக்கப்பட்டது.பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற நண்பர்கள் ஒன்றுகச் சேர்ந்து நடத்திவரும் இந்த கிளை நல்ல முறையில் படிப்பகமும் நடத்திவருகிறது. ஏழைக் குழந்தைகளுக்கு சட்டைத்துணி, புத்தகங்கள் வழங்குதல் முதலிய பாராட்டிற்குரிய பணிகளை இந்தக் கிளை செய்து வருகிறது. தோழர் பாண்டியன் இக்கிளைச் செயலாளர்.

மர்பி டவுன் (36-வது வட்டம்)

தமிழர்களும், கன்னடியர்களும் கலந்து வாழ்கின்ற மர்பி டவுன் பகுதியில் 26-7-1959 அன்று தி. மு. க. கிளையைத் தோழர் பதி அவர்கள் துவக்கி வைத்தார். வெளியூர்களிலிருந்து பெங்களூருக்குள் நுழையும் நுழைவுவாயிலில் உள்ள இந்தக் கிளை எல்லோரது பாராட்டுதலையும் பெறும் முறையில் சிறப்புடன் படிப்பகத்தை நடத்தியும், பொது நிகழ்ச்சிகளில் கலந்தும் பணியாற்றிக்கொண்டு வருகிறது.ஆர்வமுள்ள தோழர்களின் பெருமுயற்சியால் நடத்தப்படும் இக்கிளையின் செயலாளர் தோழர் கிருட்டிணன்.

எசுவந்தபூர்

பெங்களூர் நகரின் மேற்குக் கோடியில் உள்ள பெரும்பாலான கன்னட மக்கள் வாழ்கின்ற இப்பகுதியின் கிளையை, 26-7-59 அன்று தோழர் டி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலும் தோழர் பதி அவர்கள் முன்னிலையிலும் துவக்கி வைக்கப்பட்டது. கழகக் கொள்கைகளைப் புரிந்துகொள்ள வாய்ப்பில்லாத சிலரின் எதிர்ப்பு சில நாட்கள் இருந்தாலும் தற்போது வேகமாக அந்த வட்டாரத்தில் கழகக் கருத்துக்கள் பரவி வருகின்றன. ஆர்வமுள்ள பல தோழர்கள் கிளையின் நிர்வாகிகளாகப் பணியாற்றி வருகிறார்கள். கிளையின் செயலாளர் வி. பி. சண்முகம்.

சாந்திநகர்

"உதய சூரியன் படிப்பகம்" என்ற பெயரில் நீண்ட காலமாக இயங்கி வந்த இப்படிப்பகம் அண்மையில் தோழர் பதி அவர்கள் தலைமையில் தி. மு. க. கிளையாகத் துவக்கி வைககப்பட்டது. படிப்பக அமைப்பில் இயங்கி வந்த நாட்களில்கூடக் கழகக் கருத்துக்களைப் பரப்பும் நோக்குடன் கழகப் பேச்சாளர்கள் பலரைப் பயன்படுத்திப் பொதுக் கூட்டங்கள் நடத்தியுள்ளார்கள். அந்த முறையில் நான்கு மாதங்களுக்குமுன் ப. உ. சண்முகம் அவர்களைப் பயன்படுத்தி மிகச் சிறப்பான பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தி வட்டார மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளார்.

ஆண்டர்சன்பேட்டை

கோலார் தங்க வயலில் புதியதொரு நடைமுறையையும், மாற்றார் காணப் பணிபுரியும் வாய்ப்பினையும் கொண்டு செயலாற்றும் கிளை. தி. மு. க. துவங்கிய நாளிலிருந்து பணிபுரியும் சார்பு மன்றத்தை 1954-ல் தி. மு. க. கிளையாக மாற்றியமைத்தனர். துவக்கிய நாளிலிருந்து இன்றுவரை ஏறத்தாழ நாற்பதுக்கு மேற்பட்ட பொதுக் கூட்டங்களை நடத்தும் வாய்ப்பைப் பெற்ற கிளை. பொது தேர்தலில் பங்குகொண்டதும் கிளையின் தோழர்கள் கையாண்ட முறையை இன்றளவும் மாற்றார்கள் போற்றிப் புகழுவதிலிருந்து "கண்ணியம் மிக்கவர்கள் தி. மு. க. வினர்!" என்ற பெயரை நிலைநாட்டுகிறது. பல போராட்டங்களில் பங்கு பெற்றுத் தங்கள் பெயர்களுக்கு மெருகிட்டுக்கொண்டவர்கள். தோழர் தே. மோ. மாணிக்கம் இன்றையச் செயலாளர்.

சாம்பியன் ரீப்

தோழர் பதி தலைமையிலும் சிவன் செட்டி வட்டக் கிளைச் செயலாளர் திரு. தி. திராவிட மணி அவர்கள் முன்னிலையிலும் 2-3 58 அன்று துவக்கப்பட்டது. சிறந்த முறையில் பணியாற்றுகின்ற தோழர்களைக் கொண்டியங்கும் கிளை. கோ. தேவராசன் கிளையின் செயலாளர்.

ஊரிகம்

கோலார் தங்கவயலில் தோழர் பதி அவர்கள் தலைமையிலும் பெங்களூர்த் தோழர் தி. திராவிடமணி அவர்கள முன்னிலையிலும் 2-3-58 அன்று துவககபபட்டு இன்றளவும் வளர்ந்துகொண்டேயுள்ள கிளை. கலைவாணர் என். எஸ் கே. இரவுப் பள்ளியின் வாயிலாக ஏழைத் தொழிலாளர் பிள்ளைகட்குக் கல்வியறிவை இலவசமாக ஊட்டிவரும் பெரும் பணியை மேற்கொண்டுள்ளனர். சி. பி சி நாடக மன்றமும் இணைக்கப்பட்டு, கழகத் தோழர்கள் "வேலுத்தம்பி" என்ற சரித்திர நாடகத்தை உருவாக்கித் திறம்பட நடித்துக் கலைத்தொண்டும் ஆற்றி வருகின்றனர். கிளையின் செயலாளர் தோழர் கோதண்டம்.

மாரிக்குப்பம்

கோலார் தங்கவயலில் "மைசூர் மைன்சு" தங்கச்சுரங்கப் பகுதியில் செல்லப்ப நகர் பகுதியில் தி. மு. க. கிளையாகப் பணியாற்றி வருகிறது அண்மையில் டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களைக் கொண்டு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டு,வேகமாக வளர்ந்துவருகிறது. தோழர் பொ. சா. விசயன் செயலாளர்.

அசோகா நகரம்

கோலார் தங்கவயலில் தி. மு. க. கிளையாயும் பகுத்தறிவுப் பாசறையாயும் இயங்கும் தி. மு. க. அமைப்பு. தோழர் கு. வீரபாண்டியன் செயலாளர்; பெருவாரியாகப் படித்த தோழர்களைக் கொண்டு திறமையாக இயக்கப்படும் கிளை.

என்றீசு-நந்திதுர்க்கம்

கோலார் தங்கவயலில் தோழர் மு ஏ. சாம்பசிவம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது தற்போது தோழர் மருதவாணன் செயலாளர். சென்னை சட்டமன்ற உறுப்பினர் சத்தியவாணிமுத்து அவர்களை, முதன்முறையாக கோலார் தங்க வயலுக்கு அழைத்துக் கூட்டம் நடத்திக்கொள்கை விளக்கம் அளிக்கப்பட்டது. கிளை நல்ல முறையில் வேகமாக வளர்ந்து வருகிறது.

பத்ராவதி

பெங்களூரிலிருந்து 164 கல் வடமேற்கில் உள்ள சிமோக மாவட்டத்தில் உள்ள பத்ராவதி என்னும் பேரூரில் 2-1-58-ல் தோழர் கி. சோழன் தலைமையில் தி. மு. க. கிளை துவக்கப்பட்டது. தென்னகத்திலுள்ள ஒரே இரும்பு உற்பத்தித் தொழிற்சாலை அங்குதான் உள்ளது. அதுமட்டுமன்றிக் காகித உற்பத்தித் தொழிற்சாலையும், சிமெண்டு உற்பத்தித் தொழிற்சாலையும் அங்கே உள்ளன. பெரும்பாலும் தொழிலாளர் பெருமக்களே வாழ்கின்ற அந்தப் பகுதியில் கழகத்தின் கருத்துக்களுக்கு நாளும் பேராதரவு வளர்ந்த வணணமுள்ளது. முதல் ஆண்டு விழாவில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அண்மையில் கண்ணதாசன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பு மிக்க உரைகள் நிகழ்த்தினர். தோழர் தர்மலிங்கம் இந்தக் கிளையின் செயலாளர்.

இரியூர்

கருநாடகத்தின் மேற்குப்பகுதியைச் சார்ந்த சித்தல்துர்க மாவட்டத்தில் இரியூர் என்ற பகுதியில் தி மு க. கிளை ஒன்று தோழர் பதி அவர்கள் தலைமையிலும் திரு. கி. சோழன் அவர்கள முன்னிலையிலும் 5-5' 57ல் துவக்கி வைக்கப்பட்டது. பெருவாரியான கன்னட மக்களும் சிறுபான்மையினரான தமிழர்களும் ஒன்றுபட்டு அங்கே கழகத்தைச் சிறந்த முறையில் நடத்தி வருவதோடு, கலைவாணர் படிப்பகம் என்ற ஓர் அமைப்பையும் அந்தப் பகுதியில் நடத்தி வருகிறார்கள். சிறப்பான முறையில் செயல்படும் கிளைக் கழகம். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அந்தக் கிளையின ஆண்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்பானதோர் உரை நிகழ்த்தினார். கண்ணதாசன் அவர்களும், திரு. என். எஸ். இளங்கோ அவர்களும் இக்கிளையின் சார்பில் நடைபெற்ற சிறப்பான பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டுளளனர். தோழர் வேலுசாமி இந்தக் கிளையின் செயலாளர்.

பிராட்வே வட்டக் கிளை

பெங்களூர் கண்ட்டோன்மென்டில் நெருக்கடியான மார்க்கட் பகுதியில் இந்தக் கிளை அமைந்துள்ளது. பெரும்பாலும் வியாபாரிகளும், சாக்கு பைத் தொழிலாளர்களும இந்தக் கிளையில் அங்கம் பெற்றுள்ளனர். பேரறிஞர் விசுவேசுவரய்யா அவர்களின் பெயரால் ஒரு படிப்பகத்தை இந்தக் க்ிளை நடத்தி வருகிறது. இந்தக் கிளையின் செயலாளர் கா. அங்கமுத்து.

42-வது வட்டக் கிளை

மிதியடித் தொழிலாளர்கள் அதிகபாக அங்கம் வகிக்கும் இந்தக் கிளை ஒரு தொழிற் சங்கமாக இயங்கி வருகிறது. கூட்டுறவு முறையில் மிதியடிகளைத் தயார் செய்து தக்க முறையில் பங்கீடு பெறுகின்றனர். கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் பெயரால் ஒரு படிப்பகத்தை இந்தக் கிளை நடத்தி வருகிறது. இந்தக் கிளையின் செயலாளர் திரு. ம. செயராம்.

தொகுப்பு : முசிறிப்புத்தன்.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
சங்கமின் கோ, திண்டுக்கல் ரோடு, மதுரை.

மைசூர் வரலாற்றில் சோதனை மிக்க காலமது! மாவீரன் ஐதர்அலி தனது வாள் வலியால் மைசூர் அரியணையை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த நேரம்! நாடெங்கும் பரவிக் கிடந்த சின்னஞ்சிறு பாளையங்களையெல்லாம் அழித்து அகண்ட மைசூரை உருவாக்கிக்கொண்டிருந்தான்! அவனது போர்ப்பறை கேட்டு நடுங்காத பாளையங்கள் இல்லை என்றே கூறலாம்! அந்தப் பணியிலே அவனுக்குப் பெருந்துணையாக இருந்தான் தளபதி யாசின்கான்! கிடைத்த வெற்றிகளை எண்ணிப் பூரித்துக் கிடந்தான் ஐதர் அலி! ஒரு நாள்!!

ஐதர் அலி : யாசின்கான்! பாளையக்காரர்கள் அனைவரும் பணிந்து விட்டனரா? இன்னும் எத்தனை பாளையங்களை நமது அகண்ட மைசூரோடு இணைக்கவேண்டியுள்ளது?

யாசின்கான் : அனேகமாக எல்லாப் பாளையக்காரர்களும் பணிந்துவிட்டார்கள் திவான்! ஆனால்...!

ஐதர் : என்ன ஆனல்? சொல் யாசின்கான்! இந்த ஐதர்அலியின் ஆணைக்கு அடிபணிய மறுக்கும் பாளையக்காரன் எவனேனும் இருக்கிருனா?

சுல்தானு பேகம் : தங்கள் வாள் வீரத்தின் முன் மண்டியிடாதவர்கள்யார் இருக்கிருர்கள்? சொல் யாசின்கான், என்ன தயக்கம்!

யாசின் : தயக்கம் ஒன்றுமில்லை பேகம்! அந்த சிக்கபல்லாப்பூர் பாளையக்காரன் சிக்கையா கவுடா...!

ஐதர் : என்ன! அந்தச் சிறு நரியா? ஐதர்அலியின் காற்றுப் பட்டாலே அழிந்துபோகும் அந்தச் சிறு கோட்டையை வைத்துக் கொண்டிருக்கும் வாள்வீரம் கண்டறியாத வீணை நமக்குப் பணிய மறுத்தான்? யாசின்! உடனே நமது படைகள் புறப்படட்டும்! நமது போர்வீரர்களின் காலடி பட்டுக் கிளம்புகின்ற புழுதிக் காற்றே அந்தப் புல்லர்களின் கோட்டையைத் தூள் தூளாக்கட்டும்!

யாசின் : பெரும் படையேதும் தேவையில்லை பகதூர், அவனைப் பணியவைக்க! இதோ, இப்போதே தங்கள் ஆணைப்படி படை நடத்திச் செல்லுகிறேன்! பாளையக்காரன் நிச்சயம் பணிந்துவிடுவான். ஆனல்?

ஐதர் : என்ன மீண்டும் ஆனல்?

யாசின் : கோட்டைக் காவலன் ஒருவன் இருக்கிருனும். பாளையக்காரனின் அண்ணன் மகனும்! நமது அரசு வேருன்றுவதை அவன் வெறுக்கிருனும்! பெருவீரன் என்றும் கேள்வி!

ஐதர் : பெருவீரன்! (கோபமாகச் சிரித்து) இந்த ஐதர்அலியின் தாள் பணிய வைக்கிறேன் அவனை! ஒய்சலரும், மராட்டியரும் கண்டஞ்சும் என் வீரத்தின் முன்னல் இந்த முயற்குட்டி! யாசின! இழுத்துவா அவனை தர்பாருக்கு! அவன் தலையைக் கொய்து என் கோட்டைவாயிலிலே கட்டிவைக்கிறேன்!

★

[ஐதர் அலியின் ஆணை பிறந்ததும் யாசின்கானின் தலைமையில் அந்தச் சிறுபாளையத்தை அடக்கப் பெரும் படையொன்று புறப்படுகிறது! சிக்கபல்லாப்பூர் பாளையக்காரன் "சிக்கப்ப கவுடா"வும், கோட்டைக் காவல்காரன் "பெய்ச்சே கவுடா"வும் ஏனையோரும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். ஒற்றன் ஒருவன் அவையில் நுழைகிறன்!]

சிக்கப்ப : என்ன ராதண்ணா, ஏன் இப்படித் தலைதெறிக்க ஓடிவருகிருய்?

ஒற்றன் : ஆபத்து! ஆபத்து!! ஐதர் அலியின் படைகள் நந்திமலையிலிருந்து புறப்பட்டு நமது பாளையத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்றன!

சிக் : என்ன! போர் தொடுத்துவிட்டானா?

பெய்ச்சே : வேறு என்ன செய்வான் ஆதிக்க வெறிகொண்ட ஐதர்அலி! உம்! உடனே நமது படைகளைத் தயார்படுத்தவேண்டும்! காவலா! முரசு முழங்கட்டும்! நமது படைகள் அணிவகுக்கட்டும்! நமது படைகள் அணிவகுக்கட்டும்! தன்மானமுள்ள இன்னாட்டு மக்கள் அத்தனைபேரும் அணிவகுக்கட்டும் நமது பாசறையில்! ஆண்ட பரம்பரை நாம்! அடிபணியோம் இந்தப் புல்லர்களுக்கு, என உலகம் உணரட்டும்!

சிக் : பெரும் படையோடு வருவானே ஐதர்! நம்மால் சமாளிக்க முடியுமா?

"ஐதர்அலியை எதிர்ப்பவன் எவனுக இருந்தாலும் ஆயுள் முழுதும் சிறைதான் என்று நாடு முழுதும் பறைசாற்று!"

பெய் : போர்க்களத்தில் ஒப்பாரி பயன் தராது தந்தையே! அடிபணிவது நமது வீர மரபிற்கு ஏற்ற செயலா? எண்ணிப் பாருங்கள்! ஆண்டாண்டு காலமாக இந்தப் பாளையத்தை நாம் ஆளுகிருேம். யாருக்கும் அடிமையாக இருந்ததில்லை! எங்கேயோ மாடு மேய்த்துக்கிடந்த ஐதர்அலி இன்று மைசூர் அரசின் சர்வாதிகாரியாகியதுமல்லாமல். ஆண்ட இனத்தின்மீது போர் தொடுக்கிருன்! தன்மானமுள்ள எந்தக் கன்னட வீரனும், இந்தக் கொடுமையைக் கண்டு வாளேந்தாமல் இருக்க மாட்டான்!

சிக் : சரி! வருவது வரட்டும். ஐதரின் படைகளைச் சந்திக்கத் தயாராகுங்கள்!

[தொலைவில் போர்ப்பறை முழங்கும் ஒலி கேட்கிறது. ஐதர்அலியின் படைகள் கோட்டையை நெருங்குகின்றன. இரு படைகளும் மோதுகின்றன! அந்தப் பெரும் படையின் முன்னல் பாளையப்படை சின்னபின்னமாகிவிடுகிறது! பாளையக்காரன், அவன் உறவினர்கள் அத்தனைபேரும் சிறை பிடிக்கப்படுகிருர்கள்.]

★

ஐதர் : யாசின்! கொண்டுவந்தாயா அந்தப் பாளையக்காரனையும், அவன் கூட்டாளிகளையும்?

யாசின் : இழுத்து வந்திருக்கிறேன் பகதூர், அந்த நாய்களை!

ஐதர் : சரி. முறைப்படி அவர்கள் அத்தனைபேரும் எனக்கு மண்டியிட்டு வணங்கட்டும்! பின்னர் அவர்களைச் சிறைக்கு அனுப்பிவிடு! ஐதர்அலியை எதிர்ப்பவன் எவனுக இருந்தாலும் ஆயுள் முழுதும் சிறைதான் என்று நாடு முழுவதும் பறைசாற்று!

[பாளையக்காரனும் அவனது உறவினர்களும் ஐதர்அலிக்கு மண்டியிட்டு வணக்கம் செலுத்துகின்றனர்! இறுதியாக பெய்ச்சே கவுடா வருகிருன்.]

யாசின் : இவன்தான் பகதூர், அந்த மண்டை கர்வம் கொண்ட மடையன்! நமக்குப் பணிய மறுத்துப் போர்க்களத்திலே சந்திப்பதாகச் சொன்னவன்!

ஐதர் : (அவனை முறைத்துப்பார்த்து) நீதான் எமது ஆணைக்குப் பணிய மறுத்தவனோ?

பெய்ச்சே : நீ யார் எங்களுக்கு ஆணையிட? பரம்பரை பரம்பரையாக மைசூர் மன்னர்களின் ஆசியைப்பெற்றுப் பெருமையுடன் ஆண்டு வரும் எங்கள் பாளையத்தை அடக்கியாள நீ யார்? எங்கோ மாடு மேய்த்துக் கிடந்த நீ இன்று சூழ்ச்சியால் மைசூர் சர்வாதிகாரியாகி விட்டாய்! என்றும் ஆண்டு கொண்டிருப்பவர்கள் நாங்கள்! எங்களுக்கு ஆணையிட உனக்கு அதிகாரமில்லை!

யாசின் : (துள்ளி எழுந்து) ஆணையிடுங்கள் பகதூர்; இவன் தலையை மண்ணிலே சாய்க்கிறேன்!

ஐதர் : (கையமர்த்தி) பொறு யாசின்! புலியிடம் சிக்கிய புள்ளி மான் துள்ளிக் குதிக்கிறது! டேய்! சிறு நரியே! நீ ஒரு வீரன் என்பதனல்தான் உன் தலை இன்னும் தரையில் உருளாமல் இருக்கிறது! எனது தர்பாரில் என்னை எதிர்த்துப் பேசிய எவனும் வாழ்ந்ததில்லை இதுவரையில்! அடிபணிந்து மன்னிப்புக் கேள்! இல்லையேல் மேலான உன் உயிர் பறந்து விடும் இந்த உலகத்தைவிட்டே!

பெய்ச்சே : அடி பணிவதா? உனக்கா? என் உடலில் கடைசிச் சொட்டு இரத்தமுள்ள வரையில் அது நடவாது! எங்கள் பாளையத்தை அழித்தாய்! கோட்டை கொத்தளங்களை இடித்துத் தரை மட்டமாக்கினுய்! அன்னியனுன உன் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட என் நாட்டு மக்களைக் கொன்று குவித்தாய்! கொலை வெறி கொண்ட கொடியவனே, நாங்கள் வீரப் பரம்பரையிலே வந்தவர்கள்! எங்கள் உடலில் ஓடுவது சுதந்திரச் செங்குருதி! உனக்குத் தலைவணங்குவதைவிட வீதியிலே செல்லும் நாய்க்குத் தலை வணங்குவேன்!

ஐதர் : திமிர் கொண்டவனே! இதுவரையில் என்னை எதிர்த்து எவனும் இப்படிப் பேசியதில்லை! யாசின்! இவனை நமது தண்டனைக் கூடத்துக்கு இழுத்துச் செல்! வேண்டிய பரிசுகள் அங்கே இவனுக்குக் கிடைக்கட்டும்! இவனுக வழிக்கு வந்து நமக்குப் பணிய ஒரு வாரம் தவணை கொடு! மறுத்தால் கோவைச் சிறைக்கு அனுப்பு! ஆம்! கோவைச்சிறை! அதுதான் அவனுக்கு ஏற்ற இடம்!

யாசின் : தங்கள் ஆணை பகதூர்! டேய்! யாரங்கே? இவனை இழுத்துச் செல்லுங்கள்! மூன்று நாட்கள் இவனுக்கு உணவேதும் தராதீர்கள், அவன் வழிக்கு வரும்வரை!

★

[சிறைக்கு அனுப்பப்பட்ட பெய்ச்சே கவுடா, கொடூரமாகச் சித்திரவதை செய்யப்படுகிருன்! ஆனல் இறுதி வரை அவன் உறுதி தளரவில்லை! இறுதியில் அவனைக் கோயமுத்தூர்ச் சிறைக்கு அனுப்பிவிடுகின்றனர்! காலச்சக்கரம் சுழலுகிறது. ஐதர் அலியின் ஆட்சி தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் பரவி, கேரளக் கரையில் ஆண்டுகொண்டிருந்த சிறைக்கல் அரசனையும் 1776-ம ஆண்டு வெற்றி கொள்கிருன்! மலபார் போருக்குப்பின் நாடு திரும்பும் ஐதர்அலி வரும் வழியில் ஒருநாள் கோவைக் கோட்டையில் தங்குகிருன்! அவனுக்கு, பழைய பாளையக்காரன் நினைவு வருகிறது! "ஆண்டுகள் பல கடந்துவிட்டன! சிறையின் கொடுமை அவனைச் சீரழித்திருக்கும்! இப்போதேனும் அவன் நமக்கு வணக்கம் செலுத்துகிருனா? பார்ப்போம்!" என்ற எண்ணம் எழுகிறது ஐதர்அலிக்கு! ஆள் அனுப்பி அவனை அழைத்துவரச் சொல்லுகிருன்! செய்தியறிந்த பெய்ச்சே கவுடா வெகுண்டு எழுகிருன்! ஐதரைக் காணவும் மறுத்துவிடுகிருன்! கோபம் கொண்ட ஐதர் தந்திரத்தால்தான் இவனை வெல்ல வேண்டுமென்று முடிவுசெய்து, தான் அமர்ந்திருக்கும் அறையின் சுவற்றில் ஒரு துவாரம் உண்டாக்கி அதன் வழியாக அவனை இழுத்துவரச் சொல்கிருன்! துவாரத்தின் வழியாக அவன் உள்ளே நுழையும்போது தலை குனிந்துதானே ஆக வேண்டும். அது தன்னை வணங்குவதாகக் கொள்ளலாமென்பது ஐதரின் எண்ணம்! ஆனல் காவலர்களால் இழுத்து வரப்பட்ட பெய்ச்சே கவுடா சுவர் அருகில் வந்ததும் சூழ்ச்சியைப் புரிந்துகொள்கிருன்! காவலர்களை உதறித் தள்ளிவிட்டு, தனது இடது காலை அந்தத் துவாரத்தின் வழியே விட்டு ஆட்டி ஐதரை அவமானப் படுத்துகிருன்! வெகுண்ட ஐதர் அவனை மீண்டும் பல கொடுமைகளுக்கு ஆளாக்குகிருன்! பயங்கரச் சித்திரவதைகள் அந்தத் தலைவணங்காக் கன்னட வீரனது உயிரைக் குடித்துவிடுகின்றன.]

—கி. சோழன்.

சேவாசிரமம்

...அண்மையில் பெங்களூர் சேவாசிரமத்தில் 'விசாலாட்சி ஆச்சி மாணவர் இல்லம்'' என்ற ஓர் இல்லம் அமைக்க ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் ரூ. 2000 நிதி அளித்திருப்பது அறிவீர். ஆவ்வாசிரமத்தின் வரலாறே இது...

சேவாச்சிரமம் சன்னட நாட்டில் பெங்களூரில் கடந்த முப்பது ஆண்டு காலமாகப் பணிபுரிந்துவரும் பணிநிலையம் இந்நிறுவனம் 1930-ம் ஆண்டு சனவரித்திங்கள் 14-ம் நாளில் நிறுவப்பட்டது.

தமிழர் - திருநாளான பொங்கற் புதுநாளில் கடந்த முப்பது ஆண்டுகட்கு முன்னர் துவக்கப்பட்ட இந்நிலையம் தன் துவக்கம் முதல் நாட்டுத்தொண்டையும் - மக்கள் தொண்டையுமே குறிக்கோளாகக் கொண்டு நடைபோட்டு வந்திருக்கிறது.

இவ்வாசிரமம் துவக்கப்பட்ட அந்தச் சமயம் இக்கன்னட நாட்டில் வயிற்றுப் பிழைப்புக்காக குடியேறிய தமிழர்கள் இங்குள்ள பஞ்சாலைகளில் நலிந்த சமயம் ஆகும். நாளின் பொழுது முழுமையும் ஓய்வில்லாத



சேவாசிரமப் பொறுப்பாளர் அ. ம. வேணுகோபால்.

பணியாலும் - உழைப்பை மிகக் கொண்டும் பஞ்சாலைகளில் தொழில் புரிந்த அத்தமிழ் உழைப்பாளரின் வாழ்வு பற்றுக்குறையால் வரண்டு கிடந்தது. எல்லைகடந்த உழைப்பாலும், குறைவான ஊதியத்தாலும் இன்னலுற்ற அவர்கள் வாழ்க்கையில் கல்வி பூக்க ஏது இல்லை. அறிவு கிளர்ந்து எழ இடமில்லை. துன்பமும் துயரமுமே துணையாகக் கொண்டு மனித உருவில் மட்டும் வாழ்ந்து வந்த அம்மக்களை உண்மையிலேயே மனிதர்களாக மாற்ற ஒரு துணை தேவைப்பட்டது.

இந்தியநாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலம் அக்காலம். அச்சமயத்தில் நாடு உரிமை பெற்றால் தான் அனைவர் வாழ்விலும் இன்பம் தவழமுடியும் என்று எண்ணிய காந்தியார் அறப்போர்ப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் அச்சமயம். இவ்வட்டாரத்தில் குடிகொண்டிருந்த பாமரமக்கள் தொகை அத்தனையும் அவ்வறப்போர் பணிக்குத் தம்மை முழுமையும் ஈடுபடுத்திக்கொண்டால் நல்லதல்லவா! இவ்வுண்மையைப் புரிய எடுத்துச்சொன்னால் மக்கள் உழைப்பைத் தரத் தயங்கமாட்டார்கள். எடுத்துச் சொல்லவேண்டுமே! எடுத்துச் சொல்பவர் வேண்டுமே! யார் எடுத்துச் சொல்வது? தானகச் சிந்தித்துச் செயல்படும் அளவுக்கு வளர்ச்சியடையாத அம்மக்களை எவ்வழியில் வளர்ச்சியுறுபவர்களாக்கி இயங்க வைப்பது? எவராவது தன் நலம் கருதாது முன்வர வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

பஞ்சாலையில் தொழில் புரியும் தொழிலாளர் வாழ்விலும மறுமலர்ச்சி வேண்டும்! இதைச் செய்துமுடிக்க என்ன செய்வது என்று அன்று இரண்டு உருவங்கள் எண்ணின.

அவ்வுருவங்கள் தொண்டையும் - பொதுநலத்தையும் பூண்களாக அணிந்தவை. இன உயர்வையும் - நாட்டு விடுதலையையும் இலட்சியமாகக் கொண்டவை. விழிப்பற்ற பழமையையும் - மூடநம்பிக்கையையும் எடுத்தெறிய எண்ணம் கொண்டவை. ஆம்! அவ்வுருவங்கள் இரண்டும் 'செயற்கரிய செய்ய' முன்வந்த உருவங்கள்! ''மக்கள் பணியே-மகேசன பணி'' எனஎண்ணி இயன்றன செய்ய முன்வந்தனர், இரு மனிதர்கள். அவ்விருவரும் மனிதராயினும் உள்ளத்தால் கோயில் கட்டிவைத்துக் கும்பிடும் அளவு உயர்ந்தவர்கள். அவர்கள் யார்? அத்தன்னலம் கருதாத் தகையவருள் ஒருவர் திரு. இராமச்சந்திரா. பிறிதொருவர் திரு. ஆர். வி. குருசாமி. உயரிய உள்ளம் படைத்த அவ்விருவரும் 'நலிந்த மக்கள் முன்னேற்றம்-நாட்டு விடுதலை' என்ற பொருள்களில் ஒனறுபட்ட கரங்களைப் பிணைக்கத் தொடங்கி, அன்றுமுதல் பணிபுரியத் தொடங்கினர்.

அப்பகுதி வாழ் மக்களைத் திருத்துவதற்குப் பள்ளிக்கூடம் ஒன்றமைத்துப் பயிற்றுவித்தலே ஏற்றவழி எனத் துணிந்து, அப்பணியைத் துவங்கி நடத்தத் திட்டமிட்டனர். அத்திட்டத்தின் முகிழ்ச்சியால் எழுந்த அயரா உழைப்பாலும் - குன்ரு ஆர்வத்தாலும் முதலில் ஒரு 'அறிவாலயம்' தோன்றியது. அவ்வறிவாலயம்-தொடர்ந்து பணிபுரியவும்-தொழிலைச் செம்மையாகச் செய்யவும் - பொருள் வேண்டும் இன்றியமையாமை ஏற்பட்டது. அன்று பணம் படைத்தவர்களாகவும்-வள்ளல்களாகவும் இருந்தவர்களை நாடிப் பொருள் சேர்க்க எண்ணிய அவ்விருவரும் வள்ளல் டாக்டர் சீரூர் என்பவரையும், வள்ளல் தேவராவ்சிவராம் என்பவரையும் அணுகி அன்றைய நிலைமையை எடுத்துச் சொல்லினர்.

— அடுத்த இதழில் முடியும் —

இதோ வள்ளுவர்

மனிதன் நிறைவுள்ள மனிதத் தன்மையை எய்தும் வழி எது?

மனிதன் தன் வாழ்வில் தோன்றும் குற்றங் குறைகட்கு இடமளிக்காது நன்னெறியில் நின்று நிறை மனிதனுக உயரும் வழியை வகுத்து தந்த பெருந்தகைதான் திருவள்ளுவர்.

மனிதன் மனம், வாக்கு, காயம் இவைகளாற்ருன் நன்மையோ, தீமையோ இயற்றமுடியும். இவைகளின் மூலம் செய்யும் நற்காரியங்களை உலகம் ஒப்ப வேண்டும். அப்போது அது மனிதத் தன்மையெனப் போற்றப்படும். இம்மனிதத் தன்மையை ஒவ்வொருவரும் பெறுவதற்கு தெய்வப் புலவர் திருவள்ளுவரால் ஒரு நன்னெறி வகுக்கப்பட்டது. இதற்குப் பெயர் திருக்குறள்.

உலகியல், முறை, உள்ளொளி (ஆன்மீக) நெறி ஆகிய பல துறைகளிலும் ஒரு திட்டத்தோடு கடமையையாற்றி மன நிறைவு பெற்று வாழும் வகையை ஒழுங்குபடுத்தித் தந்த நூல் உலகில் திருக்குறள் ஒன்றே என்ருல் மிகையில்லை. எனவே இப்பெரும் நூலை இயற்றும்திறன் பெற்ற பெரியார் தம் வாழ்நாளின் எந்த வினடியையும் வீணாக்கியிருக்க முடியாது.

''உலகியலுக்கு அடிமையாகிவிடாமலும், எளிய இன்ப நுகர்விலே கட்டுண்டுவிடாமலும் தனித்து நின்று தமது அறிவையும், முயற்சியையும் ஆட்கொண்டாலன்றி மனித குலத்தை உய்விப்பதற்கென்று தாம் மேற்கொண்டுள்ள அரும்பணியை நிறைவேற்றுவதற்குத் தம்மால் ஈடு கொடுக்க வியலாது போகும்'' என்பதை உணர்ந்தவராகக் கருதப்பட்டதால் நிலைபெற்ற ஒளிபடைத்த அருள் உருவினராகத் திருவள்ளுவரின் திருக்கோலம் அமைக்கப்பட்டது.

'கூடாவொழுக்கம்' என்னும் அதிகாரத்தில்

''மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்''

என்று கூறியுள்ளதைக் காணின் ''தலை மழுங்க மொட்டையடித்துக்கொள்வதால் அருள் ஒளி பெறுதலோ, தாடியும் சடாமுடியும் வளர்த்தலால் முனிவராக ஆதலோ ஒருக்காலும் இல்லை என்பதுடன், உலகத்து நன்மக்களால் தவருனவை என்று கடியப் பெற்றவற்றை நீக்குதல் ஒன்றே தவமாகும்'' என்னும் கருத்து விளக்கமாகும்.

இதை இவ்வளவு வற்புறுத்த வேண்டியதேனெனில் தலையை மழித்து துறவறம் பூணுவதாலோ, முடியை நீட்டித் தவம் செய்வதாலோ பெறப்படும் நன்மையைஉலகத்துப் பெருமக்களால் தீயவை என்று கருதப்படுபவைகளை நாம் ஒழித்துக் கட்டுவதாலேயே பெற்றுவிடுகிருேம். இதை உலகம் பெரிதும் மதிப்பது கண்கூடு. இப்படி மதிக்கப்பட வேண்டுமானுல் அது தவத்திஞல்தான் கிடைக்கும். எனவே தவம் என்பது தீயவைகளை ஒழித்துக் கட்டுதல் என்க.

இத்தகு விளக்கங் கண்ட திருவள்ளுவருக்குத் திருமுடி எவ்வாறு அமைந்திருக்கக் கூடும்? சிறிதே முன்வழித்துப் பின் வளர்த்த பெருங்குடுமியா? பெரிதாக முன்வழித்துச் சிறிது நின்ற உச்சிக் குடுமியா? நாகரிக ஒப்பனையுடன் வெட்டப்பெற்ற சிகையா? இவையனைத்தும் தனித் தனிக் குழுவாரின் அடையாளமாக ஆகிவிட்டமையின் திருவள்ளுவரின் கருத்துக்குப் பொருந்துவன ஆகாவாதலின், திருவள்ளுவருக்கு திரு முடியும், நீவப்படாத தாடியும் இருத்தல் நன்று என்றுகருதப் பட்டது. ஓவிய இலக்கண முறைப்படி உயர்ந்த மதி படைத்தோருக்கு

வள்ளுவரை வரைந்த வேணுகோபால்.

நெற்றி பரந்தும், உயர்ந்தும் இருக்க வேண்டுமென்பதோடு, அவர்கள் நாசியின் நீளத்திற் கொப்பவோ, அல்லது, சற்று அதிகமாகவோ அது இருத்தல் வேண்டு மென்பதால் அதற்கொப்பத் திருவள்ளுவரின் நெற்றி அமைக்கப்பட்டது.

அதே முறைப்படி நாசி, ஒருன் முதுகில் எவ்வளவு நுண்ணிய வளைவு தென்படுகிறதோ அவ்வளவு வளைந்திருக்க வேண்டுமென்பதோடு, நாசியின் நுனி மழுங்கியிராமல், அதன் பருமனுக்கேற்ற கூர்மையுடனிருந்தால் புத்திக் கூர்மையும், உண்மையைஉயர்த்துணரும் ஆற்றலும் உண்டு என்பதோடு நாசித்துவாரத்தின் இருபக்கத்து மேல் முடிகளும் சற்று மேல் நோக்கி அகன்றிருக்க வேண்டும். அப்படி இருந்தால் நல்லவைகளைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் உண்டாகிறது.

என்பதால் ... .

திருவள்ளுவரின் நாசி அதற்கொப்ப அமைக்கப் பட்டது.

—அடுத்த இதழில் முடியுப்—

தி. மு. கழகச் சட்டதிட்டங்கள்

கழகச் சட்டதிட்டப் புத்தகம்
தயாராகிவிட்டது.

தனிப்பிரதி விலை 25 காசு.

(அஞ்சல்மூலம் பெற விரும்புவோர் தனிப்பிரதி விலையுடன் 5 காசு சேர்த்தனுப்பவும்.)

விவரங்களுக்கு :

தி. மு. க. தலைமை நிலையம்,
'' அறிவகம் ''
சென்னை - 13.

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

என்பதற்காகவே சொல்லுகிறேன். வடநாட்டு வல்லூறுகளை விரட்டினால்தான் திராவிடத்தில் வெண் புறாக்களை விண்ணிலே பறக்கவிட்டு மகிழலாம்- எனவே கன்னடப் பெருமக்களே! கழகத்தின் திறனறிந்து பணி புரிவீர்; வெற்றி பெறுவீர்"-என்று அழகு மொழி சொன்னபோது இன்பத்தால் மகிழ்ந்தனர். ஐந்தாண்டுகளுக்கு முன்னால் கன்னட மாநிலம் இருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள வளர்ச்சிக்கும் இடையிலே பெரும் பள்ளம் நிரப்பப்பட்டு விட்டதென்றே கூறலாம். கரூர்ச் சிறப்புக் கூட்டம் ஒன்றில் பேசிய கன்னட மாநிலச் செயலாளர் எஸ். வி. பதி அவர்கள், பெங்களூரில் கழகக் கூட்டம் என்றால் தாய்மார்கள்தான் அதிகம் வருவர்; கரூரில் எவருமே வரவில்லையே?" என்று வியப்புடன் கூறி வருந்தினார். எனில் கன்னடத்தின் எழுச்சியை எளிதில் நாம் புரிந்து கொள்ளலாம்! பதியும் பதிக்குப் பக்கபலமாக இருக்கும் பல தோழர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மிகச் சிறந்த பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்! மாற்றுக் கட்சியிலே இருப்பவர்களும், அனுமந்தய்யா போன்றமுன்னாள் அமைச்சர்களும், பத்திரிகையாளர்களும் நம்முடைய கருத்துக்களையும் இலட்சியங்களையும் எண்ணியெண்ணி மகிழ்ந்திடும் நிலையைக் காணும்போது வருங்காலம் இன்னும் பல சிறப்புகளுடன் நம்மை வரவேற்கவும் வாழ்த்தவும் தயாராகிக்கொண்டுள்ளதாகவே நாம் நம்பலாம். பெங்களூர் பல சிறப்புகளுக்கும் பிறப்பிடமாக அமைந்துள்ளது. நம் கழகச் சிறப்பினைக் காண்பதுபோலவே எழில் சிறப்புக்குச் சான்றாக விக்டோரியா மார்க்கெட், விக்டோரியா வைத்திய விடுதி ஆகியவை உள்ளன. 'மினர்வா சர்க்கிள்' என்ற பகுதி வெளியூர்களையெல்லாம் பெங்களூருடன் இணைக்கும் சந்திப்பாகும்! பல பாதைகள் பிரிந்து செல்லும் அழகும் சுவைக்கத்தக்கதாகும்! தென்னகத்தின் முதலிடம் பெறத்தக்கதான பெரியதோர் "லால் பாக்" என்ற அலங்காரத் திருச்சோலை, ஒரு நாள் முழுவதும் கூடச் சுற்றிப் பார்க்கத் தகுந்ததாகும்! இதன் மத்தியிலே உள்ள 'கண்ணாடி மாளிகை'யில், அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன! தென்னாட்டுத் திரைப் படங்களின் பல காட்சிகள் இந்தப் பூங்காவிலேதான் உருவாகியுள்ளன! திராவிட முன்னேற்றக் கழகம் பெங்களூர் நகரத்திலிருந்து விலகியிருக்கும் 'கண்டோன்மெண்ட்' பகுதியிலும் பலமுள்ள அடிப்படையில் வளர்ந்துள்ளது. இராணுவத்தாரின் விடுதிகள் இன்னும் அழியாத சின்னங்களாக உள்ளன. யுத்த காலத்தில் இந்தப் பகுதி வீதிகளில் நடைபெற்ற வெறிச் செயல்களைக் கேட்டால்-கேட்கும்போது இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்காமல் இருக்காது! 'அல்சூர்' பகுதியில் உள்ள பெரியதோர் ஏரியில் படகுப் பயணத்திற்கும் வசதிகள்உண்டு! இங்கிருந்து 'ஏழு கல்' தொலைவில்தான் 'சலஅள்ளி' எனப்படும் இடத்தில் விமானப்படை நிலையம் உண்டு! கண்டோன்மெண்டில் இந்துத்தான் விமானத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. அல்சூர் பகுதி கழகத் தோழர்களின் பாசறையாகும்! இதனைத் தழுவி நிற்கும் 'பிளாக்பள்ளி' பெரியார்நகர்- ஆகியவை நீண்ட காலமாகத் திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்குச் சான்றுகளாக உள்ளன! பெங்களூர் விரிவுபடுத்தப்பட்டபின் உருவான மிகச் சிறந்த 'ரசல் மார்க்கெட்' எல்லா வகையான தேவைகளையும் தரத்தக்க வணிகக்கூடமாக விளங்குகிறது. இங்கிருந்து நகரப் பகுதிக்கு அழைத்துச் செல்லும் மோட்டார் வண்டிகள் அணிவகுத்துள்ளன. சர்க்கார் நிர்வாகத்தில் நடைபெறும் போக்குவரத்து முறைகள் சிறப்பாகவே உள்ளன-சிக்கல் நிறைந்த பயணத்திலும் ஒழுங்கை நிலைநாட்டும் பணியில் வண்டி ஓட்டியின் துணைவர்களாக இருக்கும் பெண்மணிகள் பணி புரிகிறார்கள்! இங்கே காணத்தக்கன விதான சௌதாவும் 'கப்பன்பார்க்' என்ற உல்லாசப் பூங்காவும், கண்காட்சிசாலையும். எல்லா நாட்களிலும் நெருக்கடி நிறைந்த நூல் நிலையமும் எண்ணற்றோரை வரவேற்று வகை வகையான வரலாற்றுச் சுவடிகளின் சுவையான செய்திகளையும், சோகக் குரல் ஒலிகளையும் தெரிவித்து அனுப்புகிறது. கருனடக மாநிலத்தின் தலைநகர் கழக வளர்ச்சிக்குத் தந்துள்ள காணிக்கை ஏராளம்! இந்த மாநிலம் மற்ற மற்ற அரசியல் கட்சிகளுக்கு அதிகமான அளவு முக்கியத்தன்மை வழங்கவில்லை. என்றாலும் காங்கிரசின் சர்வாதிகாரத் தன்மைகள் பல நல்ல காங்கிரசுக்காரர்களையே கண்டிக்கச் செய்துள்ளன. அனுமந்தையா - நிசலிங்கப்பா - இப்போதைய முதல்வர் சட்டி போன்றார் ஆட்சிப்பிடியிலேயிருந்த போதும் இருக்கும்போதும் துணைக் கண்டத்து அரசியலில் முதலிடம் பெறும் வாய்ப்புக்களைப் பலமுறை பெற்றுள்ளார்கள்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்றுள்ள 'இமாம்' போன்ற உறுப்பினர்கள் வடநாட்டு ஆதிக்க வெறித்தன்மையை பலமுறை கண்டித்திருக்கிறார்கள். மைசூர் மாநிலம் வஞ்சிக்கப் படுகிறது என்ற குற்றச் சாட்டினை மாநிலச்சட்டமன்றத்திலேயே காங்கிரசு மந்திரிகளும் உறுப்பினர்களும் கடுமையாக விவாதித்திருக்கிறார்கள். அகில இந்தியாவை விரும்புகிற அவர்கள்தான், சொந்த மாநிலத்தின் தேவைகளுக்காகத் தங்களின் சொந்தக் கட்சியின் கட்டளையைக்கூட மீறத் தயாராக உள்ளனர். மைசூர் மாநிலத்தில் இப்போது பெல்காம் பிரச்னை எழுந்துள்ளது. அந்தப் பகுதி பம்பாயுடன் இணைக்கப்பட வேண்டுமென்பது மராட்டியரின் கிளர்ச்சி. போலீசாரின் அடக்குமுறை, கண்ணீர்ப் புகை பயன்படுத்திய ஆத்திரச் செயல் முதலியவை எல்லாம் தினத்தாள்களின் முக்கியச்செய்திகளாக அமைந்தருந்தன. வெள்ளத்தால் பாதிக்கப்படுவதை ஒவ்வோர் ஆண்டும் கருனடக மக்கள் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். மக்களின் துயர் நீக்கும் பணியில் நம் தோழர்கள் தமிழகத்தில் பணிபுரிந்து நலன் நாடுவதுபோலவே கன்னடத் தோழர்களும் காரியமாற்றத் தவறுவதில்லை. திராவிடக் கூட்டரசு அமைத்திடுவதற்குத்தக்க பக்குவத்தில் கருனடகத்தின் அரசியல் போக்குகள் பல உருவாகி வளர்ந்து வருகின்றன. கழகம் கன்னடப் பொதுமக்களின் கவனத்துக்குரிய விடுதலை இயக்கமாக வளர்ந்து வருவதை மாற்றுக் கட்சியினரும் மதிக்கின்றனர். விடுதலை ஆர்வத்தைப் பல முறை விரும்பிப் பாராட்டியுள்ளன, அங்குள்ள பல ஏடுகள்.

கன்னடத்தை வாழ்த்திடுவோம்!

—கூடலரசன்.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

கன்னடம் காது கொடுக்கின்றதா என்று ஓயாமல் கத்திக்கொண்டிருக்கும் சில தெளிவில்லா நெஞ்சங்கள் தெளியட்டும்.

பொதுக்குழு உறுப்பினர்களான, தோழர்கள் எ. டி. பிரான்சிசு. எஸ். சே. உசேன். எஸ். வி. பதி ஆகியோர் திருச்சி, சென்னை, சிதம்பரம், சேலம், நாகர்கோவில், குளித்தலை, மாயவரம் ஆகிய ஊர்களில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, கருநாடகத்தில் கழகம் வளர்வதற்கான கருத்துக்களை வழங்கி ஆக்கப்பணியிலே ஈடுபட்டனர். துணைச் செயலாளர் மா. மன்னர் அவர்களுக்குப் பின் அந்தப் பொறுப்பைத் தோழர் வி. முத்து அவர்கள் சிறிது காலம் பணி புரிந்தார். அதைப்போல் பொதுக்குழு உறுப்பினரான எ. டி. பிரான்சிசு அவர்களுக்குப்பின் தோழர் முசிரி புத்தன் அப்பொறுப்பை ஏற்றுப் பணி புரிந்து வருகிறார்.

கன்னட மொழியில் கழகக் கருத்துக்களை பரப்பும் பெரும் பணியினை தோழர்கள் எம். இராமன். இராமலிங்கம், வேந்தன், வேணுகோபால் ஆகிய தோழர்கள் சிறப்புடன் செய்து வருகின்றனர்.

கருநாடகம் கழகக் கருத்துகளுக்குக் காது கொடுப்பது மட்டுமல்லாமல், தமிழகத்து மக்கள் அல்லலுறுகின்ற நேரத்தில் நல்ல பல உதவிகளையும் செய்துள்ளது. தஞ்சையிலே வீசிய புயலின் கொடுமைக்கு ஆளான மக்களுக்கு உதவி தரக் கருநாடகம் ரூ. 500 நிதி வழங்கியது. எழில் மிக்க பொதுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து கலைஞர் கருணாநிதி அவர்களிடம் அந்த நிதி அளிக்கப்பட்டது. நிதியைப் பெற்றுக்கொண்ட கலைஞர் அவர்கள் அத்துடன் 25,000 ரூபாய் சேர்ந்துவிட்டதாக பெருத்த ஆரவாரத்திற்கிடையே அறிவித்தார். தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு கருநாடகம் ஏறத்தாழ 1000 ரூபாய் வரையில் நிதியளித்தது! அந்த நிதியினை அறிஞர் அண்ணாஅவர்கள் பொதுக் கூட்டத்திலே பெற்றுக் கொண்டார். தி. மு. க. இரண்டாவது மாநில மாநாட்டிற்கும் 550 ரூபாய் கலைஞர் கருணாநிதி அவர்கள் மூலம் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஈதலும், இசைபட வாழ்தலும் திராவிடர் பண்பு என்பதை கருநாடகம் செயல் மூலம் நிருபித்தது.

கன்னட மக்கள் மீது இந்தி ஆதிக்கம் தனது முழு மூச்சான தாக்குதலைத் துவக்கிய நேரத்தில், தி. மு. கழகம் அந்தக் கொடுமையினை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பியது. துணைப் பொதுச் செயலாளர் திரு என். வி. நடராசன் அவர்களை அழைத்துக் கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தியது. அதனைத் தொடர்ந்து பெங்களூரின் எல்லாப் பகுதிகளிலுமாக முப்பதிற்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்கள் நடத்திக் கன்னட மக்களின் கண்டனக் குரலை ஆட்சியாளருக்கு அறிவித்தது.

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவினரை பெங்களூருக்கு அழைத்துப் பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றை நடத்தி அதன்மூலம் கழகத்தின் கொள்கைகளை கருநாடாக மக்கள் புரிந்துகொள்ளும் பெரும் வாய்ப்பினையும் கருநாடக தி. மு. கழகம் பெற்றது.

1958-ம் ஆண்டு ஏப்ரல் 27-28 தேதிகளில் பெங்களூரில் நடைபெற்ற கருநாடக தி. மு. க. இரண்டாவது மாநாடு எத்தகைய சிறப்புடையது என்பதைக் கருநாடக தி. மு. க.வினர் சொல்வதைவிட அறிஞர் அண்ணா அவர்களும், நாவலரும், சம்பத்தும் தமிழகம் முழுவதும் எடுத்துச் சொல்லி பாராட்டுகிறார்களென்றால்...!

பம்பாயிலிருந்து வெளி வரும் "கரண்ட்" என்கின்ற ஆங்கில ஏடு "தி. மு. கழகம் கருநாடகத்தின்மேல் படையெடுக்கிறது" என்று தலையங்கம் எழுதியிருந்தது கருநாடக மாநாட்டு வெற்றியை பார்த்து என்றால்...!

திருவண்ணாமலை, கோபிச்செட்டிப் பாளையம், விருத்தாசலம் பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் நடைபெற்ற நமது மாநாடுகளில் திரு. எஸ். வி. பதி அவர்கள் கலந்துகொண்டு "கருநாடகத்தில் கழக வளர்ச்சி" என்பது குறித்து ஆற்றிய உரைகளை மக்கள் பெருமகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

கழகக் காவலர்கள் அனைவரும் பெங்களூருக்கும் தங்க வயலுக்கும் வருகை தந்து அவரவர் தம் உயரிய கருத்துக்களை வழங்கிக் கழக வளர்ச்சியில் பெரும் பணியாற்றியுள்ளனர். கருநாடக மாநிலமெங்கும் பொதுச் செயலாளர் சுற்றுலா மேற்கொண்டு, கழக உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் சந்தித்து அரிய பல கருத்துக்களை வழங்கியதோடு கன்னடத் தோழர்களை மேலும் மேலும் உறுப்பினர்களாக சேர்க்கும் வழியையும் ஏற்படுத்திச் சென்றார்கள். அவர்களின் சுற்றுலாவின்போது முன்னாள் முதலமைச்சர் திரு. அனுமந்தையா, முன்னாள் உயர் நீதிபதி மேதப்பா முதலிய பிரமுகர்களை சந்தித்துக் கழகக் கருத்துக்களை வழங்கினர்.

பொதுசெயலாளர் அவர்கட்குப் பிறகு கண்ணதாசன் அவர்கள் கருநாடகத்தின் பல பகுதிகளில் நீண்டசுற்றுப் பயணம் செய்தார். அவர் குரல் ஒலிக்காத இடங்களே இல்லை என்ற அளவில் ஆதரவு தந்துள்ளார்.

சென்னை மேயர் அ. பொ. அரசு அவர்களைக் கருநாடகம் இருகரம் நீட்டி அழைத்து ஒவ்வொரு திராவிடனும் பெருமை கொள்ளுமளவிற்குத் தக்க வரவேற்பைத் தந்தது. முதலில் தங்க வயல் தான் பங்கினைச் செலுத்தியது. கடும் வெயிலில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடித் தங்கள் வாழ்த்துக்களை ஆரவாரப் பேரொலியால் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர். அடுத்து பெங்களூரிலே பெரியதொரு வரவேற்பு. தென்னகப் பிற கட்சித் தலைவர்களில் யாரும் இது போன்ற வரவேற்பைக் கண்டனரல்லர். ஏன் அகில இந்தியத் தலைவர்களில் ஓரிருவரைத் தவிர பிறர் கண்டனரா வென்றும் வினாவெழுப்பத் தோன்றும்! பெங்களூர் மாநகராட்சி மன்றமும் மேயருக்கு மாபெரும் வரவேற்பைத் தந்து மகிழ்ந்தது.

கருநாடகம் தன் நிலையுணர்ந்து, மாற்றார் புரியும் கொடுமைகளினின்று விடுபடும்நாள் விரைந்து வருகிறது.

வினா வெழுப்பினோர் வியக்கிறார்கள், நம் வேகம் கண்டு!
வைதவர்கள் விழிக்கிறார்கள், நம் வளர்ச்சி கண்டு!

கருநாடகத்தில் பொன் விளையுது; காவிரிப் புனல் பாயுது - மறவர் படை திரளுது. கட்டாயம் அது மானங் காக்கும்; திராவிடம் திராவிடர்க்கேயாகும்!

[இக்கட்டுரையை எழுதியவர்கள் தோழர்கள் எஸ். வி. பதியும் ஆண்டர்சன்பேட்டை சாதுவனும் ஆவர்] ★

கழகக் கிளைகளின் செயலாளர்கள்

கட்டிக்காக்கும் தூயமணிகள்

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், எ. எல் எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83310.